முயற்சியே வாழ்வு!

RNI No. TNTAM/2011/43987
Under Postal REGD. No. TN/CCN/579/2015-2017

முயற்சியே உயர்வு!

முயற்சியே வெற்றி!

நீங்கள் உறுப்பினர் ஆகிவிட்டீர்களா?
தமிழ் ஊடக மற்றும் பத்திரிகையாளர்கள் நலச்சங்கம்
(Regd. No. 107/09)
இது உழைக்கும் பத்திரிகையாளர்களின் ஓர் ஒற்றைக்குடை..!
தொடர்புக்கு
tmjwatamilnadu@gmail.com
9444490062
9884844071

# உள்ளாட்சி முரசு

தமிழ் தினசரி

உள்ளாட்சியே இந்தியாவின் ஆத்மா!

www.ullatchimurasu.com
ullatchimurasu2@gmail.com

ULLATCHIMURASU

உள்ளாட்சி முரசு
செய்திகள் மற்றும் விளம்பரங்களுக்கு

தொடர்பு கொள்ள
96 00 10 00 49
82 48 54 49 31

| சென்னை பதிப்பு | ஆட்சி: 15 | முரசு: 229 | 29.08.2025 | வெள்ளிக்கிழமை | பக்கம்-7 | ஆண்டு சந்தா | ரூ.1750/- | 500 காசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| CHENNAI EDITION | ISSUE: 15 | MURASU:229 | 29.08.2025 | FRIDAY | PAGE -7 | ANNUAL SUBSCRIPTION | RS.1750/- | 500 PAISE |

ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம் சார்பில் விநாயகர் சதுர்த்தி விழா

பக்கம் - 2

ஸ்ரீ சக்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம்

பக்கம் - 3

நெற்குணம் கிராம ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம்

பக்கம் -7





தமிழ்நாடு முதலமைச்சர், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தினை நகர்புற பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளிகளில் விரிவாக்கம் பணியினை மயிலாப்பூர் புனித சூசையப்பர் தொடக்கப்பள்ளியில் (26.08.2025) அன்று தொடங்கி வைத்ததை தொடர்ந்து, நீலகிரி மாவட்டம் கோத்தகிரி நகராட்சி அரசு உதவிபெறும் புனித அந்தோணியார் நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில், முதலமைச்சரின் காலை உணவு திட்டம் விரிவாக்கம் செய்யும் பணிகளை தொடங்கி வைத்து, குழந்தைகளுக்கு உணவு வழங்கி, குழந்தைகளுடன் உணவு உட்கொண்டார்.

### தமிழக தொழில்துறை (ம) தொழிலாளர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

# அமெரிக்க வரியால் தமிழக ஏற்றுமதி பாதிப்பு

## நிவாரணம் வழங்க மத்திய அரசுக்கு முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தல்

**சென்னை, ஆக.29-**

"அமெரிக்க வரியால் தமிழக ஏற்றுமதி பாதிக்கப்பட்டு உள்ளது.

தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணங்களை மத்திய அரசு வழங்க வேண்டும்'' என முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்கா விதித்த 50 சதவீத வரியால் திருப்பூர் ஆயத்த ஆடை ஏற்றுமதியாளர்களுக்கு ரூ.3 ஆயிரம் கோடி வர்த்தக பாதிப்பு ஏற்படும் என திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்க தலைவர் கே.எம்.சுப்பிரமணியன் கவலை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வெளியான செய்தியை மேற்கோள் காட்டி சமூக வலைதளத்தில் முதல்வர் ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

அந்த பதிவில் முதல்வர் ஸ்டாலின் கூறியிருப்பதாவது: அமெரிக்க வரியால் தமிழகத்தில் ஏற்றுமதி கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. திருப்பூரில் ரூ.3 ஆயிரம் கோடி ஜவுளி வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான வேலைகள் ஆபத்தில் உள்ளன.

தமிழக தொழில்துறை மற்றும் தொழிலாளர்களை பாதுகாக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.



தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணம் மற்றும் சலுகைகளை மத்திய அரசு வழங்க வேண்டும் என்று நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

**அவதூறுகளில்!**

தமிழகம் வேகமாக வளரும் பொருளாதாரம் மட்டுமல்ல, இந்தியாவின் மிகப்பெரிய தொழில்துறை சக்தி என தமிழக தொழில்துறை அமைச்சர் டிஆர்பி ராஜா சமூக வலைதளத்தில் பதிவிட்டு இருந்தார். இதனை மேற்கோள் காட்டி முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

திராவிடத்தால் வாழ்கிறோம். திராவிடமே நம்மை உயர்த்தும். எல்லோரையும் வாழ வைக்கும்.

அமித்ஷா முதல் பழனிசாமி வரை திமுக ஆட்சியைப் பழித்துரைக்கும் அனைவருக்கும் மத்திய பாஜ அரசே தந்துள்ள 'நெத்தியடி பதில்' இதோ. சட்டம் ஒழுங்கைப் பேணிக்காத்து, தொழில் செய்வதற்கான சூழலை மேம்படுத்தி, தடையற்ற மின்சாரம்.

போக்குவரத்து வசதிகள் என அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்கி, வேலைக்குத் தேவையான திறன்களை இளம் தலைமுறையினருக்கு அளித்து நாம் நாளும் தீட்டிய திட்டங்களால் இந்தச் சாதனை சாத்தியமாகி இருக்கிறது.

திமுக ஆட்சியின் சாதனைச் சரித்திரம் தொடரும்.


அரசியல் காழ்ப்புணர்வில் திமுக ஆட்சிக்கு எதிராக அள்ளிவீசப்படும் அவதூறுகளில் சத்தும் இல்லை; சாரமும் இல்லை என மக்கள் புறந்தள்ளுவார்கள். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

### சென்னை மயிலாப்பூரில்

# இளைஞர்களின் புரிதலுக்காகவும், தேச பக்தியை ஊக்குவிக்கவும் மாரத்தான் பயணம்

ஹர் கர் திறங்க- ஒவ்வொரு இல்லத்திலும் நம் தேசிய கொடி, என்ற மத்திய அரசின் சுதந்திர தின கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, 15/08/2025 அன்று, LIFELINE மருத்துவமனை நிறுவனர் Dr.J.S. ராஜ்குமார், சென்னை மயிலாப்பூரில், இளைஞர்களின் புரிதலுக்காகவும், தேச பக்தியை ஊக்குவிக்கவும் மாரத்தான் பயணம் மேற்கொண்டார்.





இதில் ஜாதி பேதம் இன்றி, ஏற்றத்தாழ்வு இன்றி, வயது வித்தியாசம் இன்றி பல்வேறு நபர்கள் பங்கேற்றனர்.

மாரத்தான் முடிவில், மயிலை கபாலீஸ்வரர் கோயில் அருகில் சுதந்திர கொடியை ஏற்றி உரையாற்றினார்.

அவர் கூறியதாவது, ஒரு விடியல், ஒரு மாற்றத்திற்கான தொடக்கம், ஒரு அகிம்சையின் விதை உருவான நாள் இன்று...

இன்று நாம் பெருமையோடு நன்றி உணர்வோடு நல் நினைவுகளோடு இத் தினத்தை உணர்வு பூர்வமாக உணர வேண்டிய நாள்.

சுதந்திர தினம் என்பது நாட்காட்டியில் வரும் ஒரு சாதாரண தினம் அல்ல, வாழும் ஒவ்வொரு இந்திய குடிமகனின் இதயத்துடிப்பு, ஆளுமை மிக்க மனிதர்களின் தியாகத்தின் எதிரொலி நாள், சுதந்திர போராளிகளின் தைரியத்தை கர்வத்தை பிரதிபலிக்கும் நாள், நாம் இன்று சுதந்திரமாக பேசுவதற்கும், நடப்பதற்கும், வாழ்வதற்கும் எண்ணற்ற நபர்கள், ஆண் பெண் பாகுபாடு இன்றி போராடி வென்ற நாள் இந்நாள்...

இந்த காலை கொண்டாட்டம் என்பது, உற்சாகமான மாரத்தான் மட்டுமல்ல, சுதந்திரத்திற்காக போராடிய மாமனிதர்களை நினைவூட்டி அஞ்சலி செலுத்தி வீரவணக்கம் செய்வது ஒவ்வொரு இந்தியனின் கடமை.

இந்த மாரத்தான் நிகழ்வில் தேசிய கொடியை உயர ஏந்தி, ஒவ்வொரு அடி எடுத்து ஓடும் போது,

அந்த இதயத் துடிப்பானது நமது இந்தியாவில், சுதந்திரத்திற்காக போராடிய ஆன்மாக்களோடு ஒருங்கிணைந்து ஓடுவது போல் ஒரு எழுச்சி உணர்வு.

ஒவ்வொரு படி எடுத்து முன்னேறி ஓடும் போது, நமக்கான சுதந்திர நடப்பாதையை உருவாக்கிய அந்த மகான்களின் உருவங்கள் மன அலையில், இதய தெய்வமாய் நிற்கிறார்கள். அவர்களின் தியாக மரபு என்பது, ஒவ்வொரு இந்திய குடிமகனை "இந்தியன்" என்ற கர்வத்தோடு பயமில் லாமல் வாழ வைக்கிறது.

தேசிய கொடி ஏற்றுவது என்பது ஒரு வகையான ஆழ்ந்த மரியாதை, அதை அழகிய தமிழ் சொற்களால் விளக்க வேண்டும் என்றால் ஒரு உன்னதமான, ஆத்மார்த்தமான தேச அர்ப்பணிப்பு, தேச வழிபாடு, இந்த உணர்வு என் உயிர் இந்த கூடில் உள்ளவரை என்றும் இருக்கும். இந்த மூவர்ண கொடி வெறும் காற்றில் பறக்கவில்லை. நம் வரலாற்று சுவடுகளை, தியாக கண்ணீரை, வருங்கால இந்தியாவின் நம்பிக்கையை, கயிறாக இருக்கும் மக்களை, இரும்பு தூணாக இருக்கக்கூடிய அரசை, இவை அனைத்தும் தாங்கி இருக்கக்கூடிய பூமித்தாய் நமது பாரத மாதா, அவரின் உன்னத தியாகத்தை பறைசாற்றுகிறது.

இந்நன்னாளில் ஒரு இந்திய குடிமகன் என்ற முறையில், எனக்கு தெரிந்த தெரியாத அனைத்து சுதந்திர போராளிகளுக்கு மரியாதையையும் நன்றி உணர்வையும் செலுத்த கடமைப்பட்டுள்ளேன்.

கடைசியாக, நமது பாரத மாதா கையில் இருக்கும், இந்த மூவர்ண கொடியிலிருந்து வரும் ஒளி, இந்த தியாகத்துடர், புனிதமான இந்த பூமி, என்றும் சுதந்திரமாக மக்களை வாழ வைக்கும் என்று உறுதியாக நம்புவோம்.

நம்பிக்கை தான் வாழ்க்கை, நன்றி.



# செய்தி ஓட்டங்கள்

## ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம் சார்பில் விநாயகர் சதுர்த்தி விழா





**பொழிச்சலூர், ஆக.29-**
செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரத்தை அடுத்த பொழிச்சலூரில் ராதா கிருஷ்ணன் சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயம் சார்பில் விநாயகர் சதுர்த்தி விழா வெகு விமர்சியாக கொண்டாடப்பட்டது.

வேத மந்திரங்கள் முழங்க பூஜை புனஸ்காரங்களுடன் நடைபெற்றது.

இந்த விநாயகர் சதுர்த்தி விழாவில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு விநாயகரை வழிபட்டனர்.

கோவில் நிர்வாகியான R.பன்னீர்செல்வம் பக்தர்களுக்கு பிரசாதமும் அன்னதானமும் வழங்கினார்.

## முதலமைச்சர் கோப்பை பெண்களுக்கான கபாடி போட்டி





**திண்டுக்கல், ஆக.29-**
முதலமைச்சர் கோப்பை மாவட்ட அளவு பெண்கள் கபடி போட்டி திண்டுக்கல் மைதானத்தில் சிறப்பாக நடத்தப்பட்டது. மாவட்டத்தின் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த அணிகள் பெரும் உற்சாகத்துடன் பங்கேற்று தங்களின் திறமைகளை வெளிப்படுத்தின.

நமது அக்சயா பள்ளி பெண்கள் கபடி அணி போட்டி முழுவதும் சிறப்பாக விளையாடி, திறமை, ஒற்றுமை மற்றும் தன்னம்பிக்கையுடன் முன்னிலை வகித்தது. விடாமுயற்சி மற்றும் கட்டுப்பாடான பயிற்சியின் பலனாக, அக்சயா பள்ளி அணி முதலாம் இடத்தை பெற்றுச் சிறப்பையும் பெருமையையும் பள்ளிக்கு சேர்த்தது.

இந்த சிறப்பான வெற்றிக்கு, அனைத்து விளையாட்டு ஆசிரியர்களின் துணையுடன், அணியின் பயிற்சியாளர் வஞ்சியாத்தாள் வழங்கிய நேர்த்தியான வழிகாட்டல், ஊக்கம், மற்றும் தீவிரமான பயிற்சியே காரணமாகும்.

இந்த வெற்றியை முன்னிட்டு, அக்சயா பள்ளியின் தாளாளர், மலர்விழி செல்வி அணியினரையும் பயிற்சியாளரையும் அன்புடன் வாழ்த்தி பாராட்டினார். மாணவிகள் வெளிப்படுத்திய விடா முயற்சி, விளையாட்டு ஒழுக்கம் மற்றும் வெற்றி விரும்பும் மனப்பான்மை போன்றவை பள்ளியின் பெருமையை மாவட்ட அளவில் உயர்த்தியதாக அவர் குறிப்பிட்டார்.

அக்சயா பள்ளி சமூகமே இந்த அற்புத சாதனையில் பெருமைப்படுகிறது. இனி வரும் மாணவியரும், இதனை முன்மாதிரியாகக் கொண்டு, விளையாட்டிலும் பாடத்திட்டத்திலும் சிறந்து விளங்குவார்கள் என நம்பப்படுகிறது.



**திண்டுக்கல் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகளை மாவட்ட ஆட்சியர் செ.சரவணன் துவக்கி வைத்தார். அருகில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் சிவா, மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் சவுடமுத்து உட்பட பலர் உள்ளனர்.**

# விச்சூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்

### திமுக மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் பங்கேற்பு





**சோழவரம், ஆக.29-**
திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி சோழவரம் ஒன்றியம் விச்சூர் முதல் நிலை ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் அங்குள்ள அரசு பள்ளி உள் வளாகத்தில் நடைபெற்றது.

இதில் விச்சூர் ஊராட்சியில் வசிக்கும் பொதுமக்கள் குடும்ப அட்டையில் பெயர் திருத்தம், ஆதார் கார்டு புதுப்பித்தல், வீட்டுமனை பட்டா, மகளிர் உரிமைத்தொகை உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்கான மனுக்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வழங்கினர்.

இம்முகாமிற்கு சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் வருகை புரிந்து முகாமினை பார்வையிட்டு பொதுமக்கள் அளிக்கப்படும் மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார்.


பின்னர் பொது மக்களிடம் மனுக்களை பெற்று அதிகாரிகளிடம் வழங்கினார்.

பின்னர் உடனடியாக தீர்வு காணப்பட்ட மனுதாரர்களுக்கு சான்றுகளும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சோழவரம் வட்டார வளர்ச்சி அலுவலர் சாந்தினி, கொள்கை பரப்பு துணை செயலாளர் ஆரணி வெ.அன்பு வாணன், சோழவரம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் வழுதிகை நா.செல்வசேகரன், மாவட்ட பிரதிநிதி விச்சூர் கோ. சகாதேவன் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ஷகிலா சகாதேவன், அருமந்தை செல்வம், ஞாயிறு சுதாகர், முல்லை வாயல் ரத்தினகுமாரி, முன்னாள் திமுக மாவட்ட பிரதி நிதி வல்லூர் பா.து. தமிழரசன், அத்திப்பட்டு எம்.டி.ஜி.கதிர்வேல் மற்றும் திமுக நிர்வாகிகள் வேலாயுதம், நித்தியானந்தம், சாந்தகுமார், பிரசாந்த், தட்சிணாமூர்த்தி, ராகவேல், ஸ்டாலின், துரைராஜ், மோகன்குமார், இந்திரன், மற்றும் விச்சூர் ஊராட்சி மன்ற செயலர் கிறிஸ்டியன், உள்ளிட்ட அரசுத்துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கூடங்குளம் அன்பையா வாத்தியார் இல்லத் திருமண விழா

### முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்



**கூடங்குளம், ஆக.29-**
திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் அன்பையா வாத்தியார் மகன் அன்பழகன் வாத்தியார் மகள் அஜிநேசா மற்றும் தொழிலதிபர் சந்தன பாண்டி அவர்களது பேரன் மணமகன் அஷ்விந்த் ஆல்ட்ரின் திருமண விழாவில் மணமக்களை பாராளுமன்ற உறுப்பினர் செளந்தரராஜன் வாழ்த்தினார்.

உடன் இராதாபுரம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அந்தோணி அமலராஜா,

ராதாபுரம் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் கே.பி.கே. செல்வராஜ் மற்றும் கூடங்குளம் மேற்கு ஒன்றிய முன்னாள் கவுன்சிலர் சுரேஷ்குமார், கூடங்குளம் நகர செயலாளர் அம்பிகாபதி, இராதாபுரம் மேற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப பிரிவு ஒன்றிய செயலாளர் வினேஸ்ராஜா மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி சென்றனர்.

# ஊத்தங்கரையில் ஜெய் விஜய் சிட்பண்ட்ஸ் திறப்பு விழா

### தமிழ்செல்வம் எம்.எல்.ஏ, திறந்து வைத்தார்



**ஊத்தங்கரை, ஆக.29-**
கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை முனியப்பன் கோவில் எதிரில் ஜெய் விஜய் சிட்பண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் திறப்பு விழா நடைபெற்றது.


இவ்விழாவில் ஊத்தங்கரை அதிமுக சட்டமன்ற உறுப்பினர் டி.எம் தமிழ்செல்வம் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் நிறுவன ஊழியர்கள் மருத்துவர்கள் வினோத், பிரவீன், சீனிவாசன் மற்றும் சஞ்சு, சிலம்பரசன், அதிமுக நகர செயலாளர் சிக்னல் ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் வேடி, நரேஷ்குமார், சுந்தர வடிவேல், சிறுபான்மை பிரிவு பியாரேஜான், ஜாபர், சுப்பிரமணி வடிவேல், அருண், சாம்ராஜ் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.



**போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பரவாய் அரசு உயர்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பொதுத்தேர்வுகளை எளிதாக எதிர்கொள்ளும் வகையில் மிக முக்கிய வினா-விடைகள் அடங்கிய 'தேர்வை வெல்வோம்' புத்தகங்களை வழங்கினார்.**

# கோனேரி குப்பம் இளைஞர்களால் வைக்கப்பட்ட 11 அடி உயரமுள்ள விநாயகர் சிலை



**காஞ்சிபுரம், ஆக.29-**
காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஒன்றியத்துக்கு உட்பட்ட கோனேரிப்பும் ஊராட்சியில் விநாயகர் சதுர்த்தி நாளையொட்டி சுந்தரேச சுவாமிகள் ஜி மற்றும் ராஜேந்திரன் தலைமையிலும் கோனேரி குப்பம் இளைஞர்கள் தலைமையிலும் 11, அடிதிரு உருவ சிலை விநாயகருக்கு வைக்கப்பட்டு சிறப்பு தீபாரதனை பூஜைகள் நடைபெற்றது.

இப்பூஜையில் ஏராளமான பக்தர்கள் மற்றும் கிராம பொது மக்கள் கலந்து கொண்டு தரிசனம் பெற்று சிறப்பித்தனர். அதன் பிறகு வருகை தந்த பக்தர்களுக்கு சிறப்பு அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டது.

நிகழ்வை சிறப்பாக ஏற்பாடு செய்த கோனேரி குப்பம் இளைஞர்கள் சக்திவேல், சுபாஷ், சரவணன், குணா, சூர்யா, சுமன், நரேன், சதீஷ், செல்வா, ஈஸ்வரன், விஷ்ணு, சேகர், மோகன் ஆகியோர் சிறப்பாக ஒருங்கிணைத்து நடத்தினார்கள்.

# கபிலர்மலை வட்டார விவசாயிகளுக்கு மானியத்தில் விதை நெல் வினியோகம்

**நாமக்கல், ஆக.29-**
கபிலர்மலை வட்டாரத்தில் நடப்பு சம்பா பருவத்தில் நெல் விதைப்பதற்கு தேவையான மழைப் பொழிவு மற்றும் சீதோஷ்ண நிலை நிலவுகிறது. இதனை பயன்படுத்தி நெல் நடவு செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு கபிலர்மலை வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் உயர் விளைச்சல் தரும் தரமான சான்று பெற்ற விதைகள் வழங்கப்பட தயார் நிலையில் உள்ளன.

கோ 55 என்ற நெல் இரகமானது 2350 கிலோவும், BPT 5204 (ஆந்திரா பொன்னி) இரகமானது 2150 கிலோவும் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. தேசிய வேளாண் வளர்ச்சி மற்றும் விதை கிராம திட்டங்களின் கீழ் மேற்கண்ட நெல் இரகங்கள் கிலோ ஒன்றுக்கு ரூ 20 மானியத்தில் வழங்கப்படும்.

ஆந்திரா பொன்னி எனப்படும் BPT 5204 இரகமானது 135 நாட்கள் வயதுடையது. நடுத்தர நெல் மணிகளை அளிக்கக் கூடிய இந்த இரகத்தின் அரிசி வெள்ளை நிறமுடையதாக இருக்கும். குலை நோய்க்கு எதிர்ப்புத்திறன் உடைய இந்த இரகம், ஏக்கருக்கு 2500 கிலோ மகசூல் கொடுக்கக்கூடியது. நீர்ப்பாசன வசதி குறைவான மற்றும் மண் ஆழம் குறைந்த பகுதிகளுக்கு BPT 5204 ஒரு சிறந்த இரகமாகும். Co 55 இரகமானது 115 நாட்கள் வயதுடைய இரகமாகும். நடுத்தர நெல் மணிகளை தரக்கூடிய இந்த இரகம், துங்ரோ வைரஸ் நோய்க்கு ஓரளவு எதிர்ப்புத்திறன் உடையதாகும். இந்த இரகம் ஏக்கருக்கு 2500 கிலோ மகசூல் அளிக்கக்கூடியதாகும்.

எனவே நடவுக்கு விதை நெல் தேவைப்படும் விவசாயிகள் கபிலர்மலை வட்டார வேளாண் விரிவாக்க மையங்களை அணுகி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்கண்ட தகவலை கபிலர்மலை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ராதாமணி தன்னுடைய செய்திக்குறிப்பில் விவசாயிகளுக்கு தெரிவித்துள்ளார்.

### ஆண்டார்குப்பம் பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலில்

# அறநிலையத்துறை சார்பில் ஏழை ஜோடிக்கு திருமணம்





**பொன்னேரி, ஆக.29-**
தமிழ்நாட்டில் கோவில்களில் ஏழ்மை நிலையில் உள்ள ஜோடிகளுக்கு சீர்வரிசையுடன் அறநிலையத்துறை சார்பில் திருமணம் செய்து வைக்க அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இதன் ஒரு பகுதியாக திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அடுத்த ஆண்டார்குப்பம் பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலில் பொன்னேரியை சேர்ந்த மணமகன் விமல் மணமகள் சினேகா ஜோடிக்கு திருமணம் நடைபெற்றது.

அறநிலையத்துறை சார்பில் நடைபெற்ற இத்திருமண திட்டத்தில், 60,000 ரூபாய் மதிப்பில், மணமக்களுக்கு 4 கிராம் எடையில் தங்க திருமாங்கல்யம், மணமகன், மணமகளுக்கு ஆடை, மாலை, மெத்தை, பீரோ, கட்டில், தலையணை, பாய், கைகடிகாரம், மிக்ஸி, பூஜை பொருட்கள், பாத்திரங்கள், மணமக்கள் வீட்டினர், 20 பேருக்கு அறுசுவை விருந்து உள்ளிட்டவை வழங்கப்பட்டன.

பொன்னேரி காங்கிரஸ் எம்எல்ஏ துரை சந்திரசேகர், திருவள்ளூர் கிழக்கு திமுக மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ். கே. ரமேஷ்ராஜ் ஆகியோர் அரசு சார்பில் வழங்கப்படும் சீர்வரிசைப் பொருட்களை வழங்கி, மணமக்களை வாழ்த்தினர்.

நிகழ்ச்சியில் சிறுவாபுரி ஆண்டார்குப்பம் கோவில் செயல் அலுவலர்கள் மாதவன், ராகவன், அவைத்தலைவர் மு.பகலவன், கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ஆரணி வெ.அன்புவாணன், பொதுக்குழு உறுப்பினர் பா.செ. குணசேகரன், மாவட்ட துணை செயலாளர் கே.வி.ஜி. உமா மகேஸ்வரி, ஒன்றிய பொறுப்பாளர் ஆ.ராஜா, நெய்த வாயல் ஸ்ரீதர், காங்கிரஸ் பழவேற்காடு ஜெயசீலன், மற்றும் திமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.

## பொது அறிவிப்பு (பிறப்பு)

**வருவாய் கோட்டாட்சியர், விழுப்புரம்,**
**அ.தி.மு : அ4/2159/2025, நாள்: 25/08/2025**

திருமதி. கு. ரேவதி, க/பெ. குமரவேல், நடுத்தெரு, மேல் வாலை - 605 701, முகையூர் ஒன்றியம், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வரும் மனுதாரர் ஆகிய நான், எனக்கும், எனது கணவர் குமரவேல் ஆகிய இருவருக்கும் பிறந்த மகள் அருணா ராஜேஸ்வரி. கு.ரே 18/12/2002 அன்று பிறந்ததை, எங்களது அறியாமையினால் உரிய காலத்திற்குள் பிறப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்படாததால், தற்போது என் மகள் பிறப்புச் சான்றிதழ் கோரி விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனுவில் யாருக்காவது ஆட்சேபனை இருப்பின், தங்களுடைய ஆட்சேபனையை, இந்த அறிவிப்பைக் கண்ட 15 நாள்களுக்குள் விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில், நேரில் தாங்களாகவோ அல்லது வழக்குரைஞர் மூலமாகவோ ஆஜராகி, எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டியது, இல்லையெனில், மேற்படி மனு ஒருதலைப்பட்சமாக முடிவு செய்யப்படும் என்பதை அறியவும்,

**திருமதி.கு.ரேவதி, க/பெ.குமரவேல்**
**மனுதாரர்**
**தொடர்பிற்கு: 97882 77997**

## தஞ்சாவூர் மாவட்டம், பிள்ளையார்பட்டியில்

# ஸ்ரீ சக்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம்

**தஞ்சை, ஆக.29-**

தஞ்சாவூர் அருகாமையில் உள்ள பிள்ளையார்பட்டி ஊராட்சி எம்ஜிஆர் நகர் மேற்கு 7 ஜி சாலை கல்யாண் நகரில் புதிதாக கட்டப்பட்ட ஸ்ரீ சக்தி விநாயகருக்கு மகா கும்பாபிஷேக விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

முன்னதாக காலை 9 மணிக்கு அனுக்ஞை, விஷ்ணுவர பூஜைவாஸ்து சாந்தி,கணபதி ஹோமம், நாடி சந்தானம், திராவியாஹுதி, பூஜைகளும் அதனை தொடர்ந்து காலை 10 மணிக்கு மங்கள இசைகளுடன் கடம் புறப்பாடுகளும் சிறப்பாக நடைபெற்றது.

சரியாக காலை 10:55 மணிக்கு விமான கும்பாபிஷேகமும் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து மூலவர் கும்பாபிஷேகமும் கும்பாபிஷேகம் பிறகு





ஸ்ரீ சக்தி விநாயகருக்கு தீபாராதனை காமிக்கப்பட்டு பொதுமக்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டன.

இந்த மகா கும்பாபிஷேக விழாவில் குடியிருப்பொரு நல சங்கத்தை சார்ந்த பெருந்திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

அனைவருக்கும் திருப்பணி குழுவினர்கள் சார்பாக பொங்கல், புரியோதரை, சுண்டல், சாம்பார் சாதம், தயிர் சாதம் ஆகிய அறுசுவை உணவுகள் வழங்கப்பட்டன.





விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு அடையாறு அண்ணபூரணி உணவகத்தின் உரிமையாளர் ஜெகதீஷ் சார்பில் 500 நபர்களுக்கு கேசரி, சுண்டல், பிரிஞ்சி, தயிர் சாதம் போன்றவற்றுடன் அன்னதானம் வழங்கினார்.

## தஞ்சை புதிய பேருந்து நிலையம் அருகே

# புதிய சுகஜீவன் மருத்துவமனை திறப்பு விழா

**தஞ்சை, ஆக.29-**

தஞ்சை புதிய பஸ் நிலையம் அருகே உள்ள மேல வஸ்தசாவடி நாகப்பட்டினம் பைபாஸ் சாலையில் உயர்தர சிகிச்சைக்கான சுகஜீவன் மருத்துவமனை திறப்பு விழா நடைபெற்றது.

விழாவில் பங்குதாரர்கள் உறவினர்கள் திறந்து வைத்து குத்து விளக்கு ஏற்றினார்கள்.

அதனை தொடர்ந்து சுகஜீவன் பங்குதாரர்களும் டாக்டர்கள் திருமலை பாண்டியன், சுரேந்திரபாபு, செந்தில் நாதன், ராஜ்குமார், மயிலன் சின்னப்பன், விஜயகுமார், நித்யா செந்தில்நாதன் ஆகியோர் அனைவரையும் பொன்னாடை போர்த்தி நினைவு பரிசுகள் வழங்கி வரவேற்றார்.

விழாவில் தஞ்சை மருத்துவ கல்லூரி



மருத்துவமனையின் நிர்வாக அதிகாரிகள் டாக்டர்கள் ராமசாமி, செல்வம்,

முத்து மகேஷ், டாக்டர்கள் குமரவேலு, மோகன்தாஸ், சிவக்குமார், பாலசுப்பிரமணியன், இந்தர்ராஜ், மைக்கேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன், தஞ்சை மாநகராட்சி மேயர் சண்.ராமநாதன், துணை மேயர் அஞ்சுகம்பூபதி, பூண்டி கிருஷ்ணசாமி வாண்டையார், வக்கீல் எஸ்.எஸ். ராஜ்குமார், தொழிலதிபர் ஆர்.எம். பாஸ்கரன், திருவையாறு ஒன்றிய செயலாளர் இளங்கோ மற்றும் தனியார் மருத்துவமனையின் அதிபர்கள், பங்குதாரர்கள், மெடிக்கல் ஷாப் அதிபர்கள், டாக்டர்கள், கல்லூரி பேராசிரியர்கள், செவிலியர்கள், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# கொலை வழக்கில் குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை

## செங்கல்பட்டு மாவட்ட முதன்மை நீதிமன்றம் தீர்ப்பு

**செங்கல்பட்டு, ஆக.29-**

செங்கல்பட்டு மாவட்ட முதன்மை நீதிமன்றம், 26.08.2025 அன்று தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த கோயில்ராஜ், வ/44, த/பெ ராஜா நாடார், என்பவர், ஜான் ராஜா சிங், வ/68, த/பெ தாசன், மாங்காடு, காஞ்சிபுரம், என்பவரைக் கொலை செய்த வழக்கில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு, 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இச்சம்பவம் 30.01.2021 அன்று இரவு 9.30 மணியளவில், பீர்க்கன்கரணை பகுதியில் உள்ள, ஒரு இரும்பு குடோனில் கணக்காளராக பணிபுரிந்து வந்த ஜான் ராஜா சிங், மது அருந்திவிட்டு வேலைக்கு வந்த, குற்றவாளி கோயில்ராஜை, தனது முதலாளியின் உத்தரவின் பேரில், வேலையிலிருந்து நீக்கியுள்ளார்.

இதன் காரணமாக ஏற்பட்ட தகராறில், பீர்க்கன் கரணை ஏரிக்கரையில் வைத்து கோயில்ராஜ், ஜான் ராஜா சிங்கை அவரது தலையையும் காதுகளையும் துண்டித்துக் கொலை செய்துவிட்டதாக, இறந்தவரின் சக ஊழியரான சீனிவாசன், வ/27, த/பெ யோகுப்பு, கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு, அளித்த புகாரின் பேரில், பீர்க்கன்கரணை காவல் நிலையத்தில் Cr. No. 54/2021 U/s 302ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

புலன் விசாரணையின் போது, எதிரி கோயில்ராஜ், கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, தொடர்ந்து புலன்விசாரணையை சிறப்பான முறையில் முடித்து, குற்றப் பத்திரிகையை எதிரி கோயில்ராஜிக்கு, எதிராக 05.03.2021 அன்று, நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, SC.No.158/2021, என எண்ணிடப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்டு, 13 முக்கிய சாட்சிகளை விசாரணை செய்தும், 14 சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் மற்றும் 6 சான்று பொருட்களை பரிசீலனை செய்தும், உரிய சட்ட நடைமுறைகள் அனைத்தையும் பின்பற்றி, நீதிமன்றம் குற்றசாட்டபட்டவரை, குற்றவாளி 61601 தீர்மானித்து கீழ்கண்ட தண்டனை வழங்கியுள்ளது.

பிரிவு 302 IPC: 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் ரூ.1,000 அபராதமும், கட்ட தவறும் பட்சத்தில் கூடுதலாக 3 மாதங்கள் சிறை தண்டனையும் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

# வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய மாதா திருவிழா

## உள்ளூர் விடுமுறை: நாகை மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ் தகவல்

**நாகை, ஆக.29-**

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய மாதா திருவிழாவானது 29.08.2025 அன்று கொடியேற்றத்துடன் தொடங்கி 08.09.2025 வரை நடைபெற உள்ளது.

மேற்படி விழாவின் முக்கிய நிகழ்வான வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா திருவிழா (அன்னையின் பிறந்தநாள் விழா) வருடாந்திர விருந்து நாளான 08.09.2025 திங்கட்கிழமை அன்று மாவட்டத்தில் உள்ள மாநில அரசு அலுவலகங்களுக்கும் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கும் (தேர்வுகளுக்கு இடையூறு இல்லாமல்) உள்ளூர் விடுமுறை அளித்தும், அதனை ஈடு செய்திடும் விதமாக எதிர்வரும் 20.09.2025 சனிக்கிழமை அன்று வேலை நாளாக அறிவித்தும் மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ் உத்தரவிட்டுள்ளார்.





திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (26.082025) அன்று மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புகுழுத்தலைவர் / திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் தலைமையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.,இ.பிரகாஷ், கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் கணபதிப.ராஜ்குமார், மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாநகராட்சி ஆணையார் எம்.பி.அமித், துணைமேயர் ரா.பாலசுப்பிரமணியம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, திருப்பூர்மாநகராட்சி 4ம் மண்டலக்குழுத்தலைவர் இல.பத்மநாபன், வருவாய் கோட்டாட்சியர்கள் (திருப்பூர்) மோகனசுந்தரம், (தாராபுரம்) பெலிக்ஸ்ராஜா, (உடுமலைப்பேட்டை) குமார், மாநகராட்சி துணை ஆணையர் சுந்தர்ராஜன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட நிலையிலான அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# போச்சம்பள்ளியில் இந்து முன்னணி கட்சியினர் அன்னதானம்



**போச்சம்பள்ளி, ஆக.29-**

போச்சம்பள்ளி பேருந்து நிலையம் அருகில் இந்து முன்னணி கட்சி சார்பில் விநாயகர் சதுர்த்தி யொட்டி மாபெரும் அன்னதானம் வழங்கப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அடுத்த போச்சம்பள்ளி பேருந்து நிலையம் அருகில் விநாயகர் சதுர்த்தி யொட்டி இந்து முன்னணி கட்சி மாவட்டத் துணைத் தலைவர் செந்தில் முன்னிலையில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் வல்லரசு, ஒன்றிய பொறுப்பாளர் பிரசாந்த் தலைமையில் விநாயகர் சிலை அமைத்து படையலிட்டு சிறப்பு பூஜை செய்து வழிபாடு செய்தனர்.

இதனை தொடர்ந்து மாபெரும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக பாரதிய ஜனதா கட்சி கிழக்கு மாவட்ட தலைவர் கவியரசு,

மாவட்டத் துணைத்தலைவர் சுந்தரமூர்த்தி, மாவட்ட செயலாளர் சரவணன், மண்டல தலைவர்கள் சாமிநாதன், சுப்பிரமணி உள்ளிட்ட பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள் மற்றும் இந்து முன்னணி கட்சி சார்ந்த நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், நூத்தப்பூர் ஊரட்சிக்குட்பட்ட நெற்குனம் கிராமத்தில் அரசு மேல்நிலைப்பள்ளியில் 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற திட்டம் நடைபெற்று வந்த நிலையில் பெரம்பலூர் மாவட்ட கழக செயலாளர் ஜெகதீசன் கலந்துகொண்டு பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து உடனடி தீர்வு கான அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். உடன் நூத்தப்பூர் ஊராட்சி செயலர் ராஜேந்திரன், கிராம நிர்வாக அலுவலர் ரமேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.





இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் ஜெ.யு.சந்திரகலா தலைமையில் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் நலன் காக்கும் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் செ.தனலிங்கம், இணை இயக்குனர் (பொ) வேளாண்மை செல்வராஜ், இணைப்பதிவாளர் கூட்டுறவு சங்கங்கள் மலர்விழி, இணைப்பதிவாளர் மத்திய கூட்டுறவு வங்கி ராமதாஸ், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் முதுநிலை மண்டல மேலாளர் ஏகாம்பரம், நேர்முக உதவியாளர் வேளாண்மை வெங்கடேஷ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் விவசாயிகள் உள்ளனர்.

## நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில்

# போதைப்பொருள் ஒழிப்பு நடைப்பயண விழிப்புணர்வு





**நாமக்கல், ஆக.29-**

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் யூத் ரெட் கிராஸ் மற்றும் போதைப் பொருள் தடுப்புக் குழு ஆகியவற்றின் சார்பில் "போதைப்பொருள் ஒழிப்பு நடைப்பயண விழிப்புணர்வு" நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) முனைவர் மு. ராஜேஸ்வரி தலைமை வகித்தார். 65 மாணவ, மாணவியர்கள் மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்ற இந்த போதைப்பொருள் ஒழிப்பு நடைப்பயண விழிப்புணர்வு, கல்லூரி நுழைவு வாயிலில் தொடங்கி, லத்துவாடி வரை சென்று, பின்னர் மீண்டும் கல்லூரி நுழைவு வாயிலில் நிறைவடைந்தது.

இந்த போதைப்பொருள் ஒழிப்பு நடைப்பயணத்தின் போது, போதைப்பொருள் பயன்படுத்துவதால் நுரையீரல் புற்றுநோய், சுவாசக் கோளாறுகள், இருதய நோய்கள், பக்கவாதம், உதடு, நாக்கு, ஈறு, தொண்டைப் புற்றுநோய் போன்ற உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்றும், மேலும் மனநல பாதிப்பு, மனச்சோர்வு, கவலை போன்ற பிரச்சினைகளும் தோன்றுகின்றன என்றும், அதோடு போதைப்பொருள் பயன்பாட்டின் விளைவாக வேலை இழப்பு, குடும்பச் சிக்கல்கள், குற்றச்செயல்களில் ஈடுபடுதல் போன்ற சமூகப் பிரச்சினைகளும் உருவாகின்றன என்றும், மேலும் போதைப்பொருளை தவிர்த்தால் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழலாம் என்றும் வலியுறுத்தப்பட்டு, பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், அனைத்து மாணவ, மாணவியரும் போதைப்பொருள் பயன்பாட்டை தவிர்ப்பதற்கான உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மோகனூர் சிறப்பு காவல் உதவியாளர் ஜெயச்சந்திரன், விலங்கியல் துறைத் தலைவர் இராஜசேகர பாண்டியன், போதைப்பொருள் தடுப்பு குழு ஒருங்கிணைப்பாளர் பார்வதி மற்றும் உறுப்பினர் ராஜ்குமார், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், ஆசிரியரல்லா அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி யூத் ரெட் கிராஸ் திட்ட அலுவலர் சந்திரசேகரன் செய்திருந்தார்.

# ரூ.17 லட்சத்தில் மூழ்கிய காஞ்சிபுரம் ஏலேல சிங்க விநாயகர்

**காஞ்சிபுரம், ஆக.29-**

விநாயகர் சதுர்த்தி திருநாளையொட்டி காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோவில் சன்னதி தெருவில் அமைந்துள்ள ஏலேல சிங்க விநாயகர் கோவிலில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு ரூ.17 லட்சம் மதிப்பிலான ரூபாய் நோட்டுக்களால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு தீபாரதனை நடைபெற்றது.

மகாசக்தி பீடங்களில் ஒன்றாக இருந்து வரும் காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோவிலில் சன்னதி தெருவில் அமைந்துள்ள பழமையான ஏலேல சிங்க விநாயகர் திருக்கோவிலில் ஆண்டுதோறும் விநாயகர் சதுர்த்தி திருநாளன்று ஆலயத்துக்கு வரும் பக்தர்களிடம் ரூபாய் நோட்டுக்களை சலவை தாள்களாக பெற்று விநாயகரை அலங்கரித்து சிறப்பு தீபாரதனைகள் நடைபெறுவது வழக்கம் பல ஆண்டுகளாக வழக்கமாக இருந்து வருகிறது.

இந்த ஆண்டு 18 ஆம் ஆண்டாக விநாயகர் சதுர்த்தியொட்டி ஏலேல சிங்க விநாயகருக்கு சிறப்பு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து ரூ.17 லட்சம் மதிப்பிலான ரூபாய் நோட்டுக்களால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு



தீபாதாரணை பூஜைகள் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டது பொங்கல் புளியோதரை வழங்கப்பட்டது.

ஏற்பாடுகளை ஆலய நிர்வாக குழுவின் தலைவர் குப்புசாமி, செயலாளர் ஜெகநாதன், பொருளாளர் சீனிவாசன் ஆகியோர் செய்திருந்தனர்.

இது குறித்து ஆலய நிர்வாக குழுவின் தலைவர் குப்புசாமி கூறுகையில் ஆண்டுதோறும் பக்தர்களிடம் லட்சக்கணக்கில் சலவை தாள்களாக பெற்று அதனை விநாயகருக்கு அலங்கரித்து தீபாராதனை நடத்துவோம் என்று கூறினார். பக்தர்களிடம் எவ்வளவு பணம் பெற்றுக் கொண்டோம் என்பதை கணக்கு வைத்துக்கொண்டு அத்தகையை விநாயகர் சதுர்த்தி விழா முடிந்தவுடன் அவர்களிடமே திருப்பிக் கொடுத்து விடுவோம் என்று கூறினார். இந்த ஆண்டு மொத்தம் ரூபாய் 17 லட்சம் மதிப்பில் விநாயகர் அலங்கரிக்கப்பட்டு இருந்ததாகவும் அவர் தெரிவித்தார். இதைத்தொடர்ந்து ஏராளமான பக்தர்கள் வருகை தந்து கண்டு களித்து பிரசாதம் வழங்கி சென்றனர்.

# கொழுகொண்டாப்பள்ளி பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலதிட்டம்



அஞ்செட்டி அருகே பள்ளி மாணவர்களுக்கு டெசனரி பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

கிருஷ்ணகிரி மாவட்டம் அஞ்செட்டி அருகே கொழுகொண்டாப்பள்ளி கிராமத்தில் 30க்கும் மேற்பட்ட ஏழை எளிய மக்கள் வசித்து வருகின்றனர், அந்த கிராமத்தில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு தேவையான நோட்டு புத்தகங்கள் வேண்டி அப்பகுதியைச் சேர்ந்த சமூக சேவகர் ஒருவர் அஞ்செட்டி காவல் நிலையத்தில் பணிபுரியும் முதன்மை காவலர் கோவிந்தராசு அவர்களிடம் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் அந்த கிராமத்தில் உள்ள

20 ஏழை எளிய பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நோட்டு, பேனா, பென்சில், ஜாமென்ட்ரி பாக்ஸ், உள்ளிட்ட டெசனெரி பொருட்கள் மற்றும் வாட்டர் பாட்டில், காலணிகளை அஞ்செட்டி முதல்நிலை காவலரும் சமூக சேவகருமான கோவிந்தராசு வழங்கினார். அப்பகுதி கிராமம் காவலர் கோவிந்தராஜ்க்கு நன்றி தெரிவித்தனர்.


# கந்துவட்டி கேட்டு மிரட்டினால் கடும் நடவடிக்கை: எஸ்.பி.ஸ்டாலின் எச்சரிக்கை

நாகர்கோவில், ஆக.29-



கன்னியாகுமரி மாவட்டம்அஞ்சு கிராமம் காவல் நிலையத்தில் கந்துவட்டி கேட்டு மிரட்டியவர் மீது வழக்குபதிவுசெய்யப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் அஞ்சு கிராமம் காவல் நிலையத்திற்கு உட்பட்ட மருங்கூர் பகுதியை சேர்ந்த பெண் ஒருவர் அளித்த புகாரின் பேரில் மருங்கூர் அம்மன் நகர் பகுதியைச் சேர்ந்த அருள்ராஜ் என்பவரது மனைவி மீது அதிகமான வட்டி பணம் கேட்டு மிரட்டல் விடுத்ததாக அஞ்சுகிராமம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. பொதுமக்கள் கந்து வட்டி தொடர்பான தகவல்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களை நேரடியாகவோ அல்லது 8122223319 என்ற வாட்ஸ் அப் எண்ணிற்க்கோ தகவல் தெரிவிக்கலாம் என்று கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை அறிவிக்கபட்டுள்ளது.





▶ காஞ்சிபுரம் மாவட்டம் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் எம் எஸ் சுகுமார் அவர்களின் தந்தையும் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் திருமதி நித்தியா சுகுமார் அவர்களின் மாமனார் திரு எம் சுப்பிரமணி நாயக்கர் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி முன்னிட்டு காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை மனோகரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்..அருகில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் யுவராஜ் , ஒன்றிய குழு உறுப்பினர் ஹேமலதா ஆடலரசு , அம்மன் பில்டர்ஸ் உரிமையாளர் தாஸ் , தீபம் சுரேஷ் படு நெல்லி பாபு உள்ளிட்ட திமுக கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்..

# பிள்ளையார்பட்டி ஸ்ரீகற்பக விநாயகர் கோவிலில் தீர்த்தவாரி உற்சவம்



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே உலகப் பிரசித்திபெற்ற பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோவிலில் சதுர்த்தி பெருவிழாவை முன்னிட்டு ஆகஸ்ட் 18 ம் தேதி கொடியேற்றத்துடன் 10 நாள் விழா வெகுவிமர்சையாக துவங்கியது.

தென்தமிழக குடவரை கோவிலில் பிரசித்தி பெற்ற தலங்களில் ஒன்றான பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோவிலில் சதுர்த்தி பெருவிழாவை முன்னிட்டு 10ம் நாள் திருவிழாவான இன்று விநாயகர் சதுர்த்தியையொட்டி மூலவருக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. காலை 10 மணிக்கு தங்க மூஷிக வாகனத்தில் கற்பக விநாயகர் அலங்கரிக்கப்பட்டு கோவில் வளாகத்தில் தீபாராதனை நடந்தது.

அதனை தொடர்ந்து உற்சவர் கோவிலில் இருந்து கோவிலை சுற்றி வலம் வந்து கோவில் திருக்குள கரையில் எழுந்தருளினார். அங்கு கோவில் தலைமை பிச்சைக்குருக்கள் தலைமையில் அங்குச தேவருக்கு பால்,பன்னீர்,தயிர்,சந்தனம் உள்ளிட்ட 16 வாசனை திரவியங்களுடன் அபிஷேகம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து அங்குச தேவருக்கு கோவில் திருக்குளத்தில் தீர்த்தவாரி உற்சவம் பக்தர்கள் முன்னிலையில் வெகுவிமர்சையாகயாக நடைபெற்றது. தொடர்த்து தீபாராதனை காட்டப்பட்டு பக்தர்களுக்கு திருக்குளத்தில் தண்ணீர் தீர்த்தமாக தெளிக்கப்பட்டது.




▶ இந்திய அரசின் வழிகாட்டலின் படி குன்னூர் பிராவிடென்ஸ் மகளிர் கல்லூரி அருகாமையில் உள்ள ஐந்து கிராமங்களைத் தத்தெடுத்துள்ளது,அதில் ஒன்றான பெல்லட்டிமட்டம் கிராமத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.உன்னத் பாரத் அபியான், போதைப் பொருள் தடுப்பு சங்கம், நாட்டு நலப் பணி திட்டம்,வரலாற்றுத் துறை மற்றும் வணிகவியல் துறை சார்பாக போதைப் பொருள் தடுப்பு நடைப்பயணம் ஊர்த் தலைவர் முன்னிலையில் நடைபெற்றது.நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் ஷானி ரஸ்கின், போதைப் பொருள் தடுப்பு ஒருங்கிணைப்பாளர் திருமதி ரேவதி மற்றும் வணிகவியல் துறை பேராசிரியர் சுவாதி ஆகியோர் மேற்பார்வையில் 26/8/2025 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ஐம்பதிற்கு மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்றனர்.

# காஞ்சிபுரத்தில் இந்து முன்னணி சார்பில் விநாயகர் சதுர்த்தி விழா

காஞ்சிபுரம், ஆக.29-

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு காஞ்சிபுரத்தில் இந்து முன்னணி சார்பில் 35 ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்பட்டது ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்வாமி தரிசனம் செய்தனர் நாடு முழுவதும் இன்று விநாயகர் சதுர்த்தி விழா கோலாகலமாக கொண்டாடப்படுகிறது அதன்படி காஞ்சிபுரம் மாவட்டம் இந்து முன்னணி



சார்பில் காஞ்சிபுரம் பெரியார் தூண் அருகே 35 ஆம் ஆண்டு ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி விழா நடைபெற்றது விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு 10 அடி உயரம் கொண்ட அன்னப்பறவை மேல் அமர்ந்துள்ள விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் மற்றும் தீபாரதனைகள் நடைபெற்றது இந்த விழாவில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்து வணங்கி வழிபாடு செய்தனர் மேலும் கலந்து கொண்ட பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது இந்த விழாவானது மொத்தம் ஐந்து நாட்கள் சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது




▶ கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி வட்டம் புங்கப்பாடி கீழ்பாகம் ஆத்துமேடு ஒன்றியத்தில் உள்ள வலம்புரி சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு கணபதி ஹோமம், சுதர்சன ஹோமம் மற்றும் மங்கல இசையுடன் விழா துவங்கியது. யாகசாலையில் இருந்து கடங்கள் புறப்பாடாகி, கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு, பொதுமக்களுக்கு தெளிக்கப்பட்டது. தொடர்ந்து, வலம்புரி சித்தி விநாயகருக்கு சிறப்பு பூஜைகள் மற்றும் மகா தீபா ஆராதனை நடைபெற்றது. விழாவில் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# புகார்களுக்கு ஆளான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க டாஸ்மார்க் முதுநிலை மண்டல மேலாளர் தயங்குவது ஏன்.?

**தமிழக அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டு வரும் தஞ்சாவூர் டாஸ்மார்க் நிர்வாகம்.**

தஞ்சாவூர் மாவட்டத்தில் டாஸ்மார்க் நிர்வாகத்தில் 138 கடைகள் செயல் பட்டு வருவதாகவும் இந்த கடைகளில் மாதம், மாதம் மாவட்ட மேலாளர் தமிழ் மணிக்கு கடையில் நடைபெறும் வசூலைப்பொறுத்தளவு 10ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரையிலும் துணை மேலாளர் மணிகண்டன் அவர்களுக்கு ஒரு கடையில் வசூலைப் பொறுத்தளவு 3000 முதல் 5 ஆயிரம் வரை தனித்தனியாக கொடுக்க வேண்டும் என்று கடை ஊழியர்கள், மேற்பார்வையாளர்களுக்கு உத்தரவு பிறப்பித்து மாதா மாதம் கடைகளிலிருந்து வசூல் பணம் முன்னாள் துணை மேலாளராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ள அதிகாரியின் மூலம் வசூல் வேட்டை நடைபெறுவதாகவும் இதனால் கடையில் இருக்கக்கூடிய ஊழியர்கள் பெரும் இன்னலுக்கு ஆளாவதுவாகவும் புலம்பி வருகின்றன . இது சம்பந்தமாக நமது நாளிதழ் 9 8 2025 அன்று செய்தி வெளியிடப்பட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது இது சம்பந்தமாக திருச்சியில் இருக்கக்கூடிய முதுநிலை மண்டல மேலாளர் அவர்களிடம் விளக்கம் கேட்டிருந்தோம்,ஒரு சில நேரம் மட்டுமே தொலைபேசி எண்ணை எடுத்தாலும் அதற்கான எந்த




உரிய பதிலையும் அளிக்காமல் இருந்தார் இது தொடர்பாக மீண்டும் தொடர்பு பேசிய போது மாவட்ட மேலாளர் இடமும் மாவட்ட துணை செயலாளர் விளக்கம் கேட்டிருக்கிறேன் விளக்கம் வந்த பிறகு இது சம்பந்தமாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளிக்கப்படும் என்று கூறினார். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை ஏனென்று தெரியவில்லை என்று பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர் அப்படியானால் மாவட்ட மேலாளருக்கும் துணை மேலாளருக்கும் உயர் அதிகாரியாக இருக்கக்கூடிய முதுநிலை மண்டல மேலாளருக்கு இது தெரிந்தே தான் நடக்கிறதா அப்படி இல்லை என்றால் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை நடவடிக்கை எடுக்காமல் சாக்கு போக்காக பதில் சொல்லியே வருகிறார் முதல் நிலை மண்டல மேலாளர் இப்படியே போனால் தமிழகம் முதல்வரும் துறை அமைச்சருக்கும் மிகப்பெரிய கலங்கத்தை ஏற்படுத்தக் கூடிய நிகழ்வாக இருக்கின்றது இந்த செய்திகளும் நடவடிக்கை எடுப்பார்களா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.



▶ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 27 வது வார்டு பகுதியான போலீஸ் ஸ்டேஷன் ரோட்டில் உள்ள பெட்டி கடையில் நேற்று நாகர்கோவில் மாநகராட்சி சுகாதார அதிகாரி ஆல்பர் மதியரசு தலைமையில் சுகாதார பிரிவினர் ஆய்வு செய்ததில் தடைசெய்யப்பட்ட மெல்லும் புகையிலை இருந்ததை கண்டுபிடித்து மாநகராட்சி அதிகாரிகள் புகையிலையை பறிமுதல் செய்தனர் .



▶ தஞ்சாவூர் கீழவாசல் புனித ஜெபமாலை மாதா கோயில்தெரு பக்தர்கள் அலங்கரிக்கப்பட்ட தேர் பவனியுடன் வேளாங்கண்ணி புறப்பட்டனர். ஆண்டுதோறும் வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை கொடியேற்ற நிகழ்வு 29 ஆகஸ்ட் கொடியேற்ற விழா துவங்கி செப்டம்பர் 07 ஆம் தேதி தேர்பவனி திருவிழா நடைபெறுவது வழக்கம் அதேபோல் இந்த ஆண்டும் ஆகஸ்ட் 29 ஆம் தேதி கொடியேற்ற நிகழ்வு நடைபெறுவதையொட்டி பல்வேறு மாவட்டங்களில் இருந்து பாதயாத்திரையாக பக்தர்கள் மாதாவின் சுரூபத்திடன் கூடிய சப்பாரத்துடன் கூட்டம் கூட்டமாக வேளாங்கண்ணி நோக்கி படையெடுத்துள்ளனர் இந்நிலையில் தஞ்சை கீழாவாசல் புனித ஜெபமாலை மாதா கோவில் தெருவில் இருந்து பக்தர்கள் சப்பாரத்துடன் பாதயாத்திரையாக சென்றுகொண்டுள்ளனர்



▶ திருப்பத்தூர் மாவட்டம் மாதனூர் ஒன்றியம் ஆம்பூர் அடுத்த துத்திப்பட்டு ஊராட்சியில் ஸ்ரீ வரசக்தி விநாயகர் ஆலயம் சார்பாக விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு ஊராட்சி முழுவதும் ஆங்காங்கே விநாயகர் சிலைகள் அமைக்கப்பட்டு அதிகாலையில் 6:30 லிருந்து 7:30 வரை கணபதி ஓமம் பூஜைகள் அலங்காரங்கள் அதி விமர்சையாக நடைபெற்றது. இதில் திரளான ஊர் பொதுமக்கள் ஊர் நாட்டான்மைதாரர்கள் ஊராட்சி மன்ற தலைவர்.சுவிதா கணேஷ் துணைத் தலைவர். விஜய் வார்டு கவுன்சிலர்கள் மற்றும் விமல் அசோக் சிவா சந்துரு மற்றும் திரளான ஊர் வாலிபர் பொதுமக்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பின்னர் பொதுமக்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.



▶ பேர்ணாம்பட்டு ஒன்றியம் எம்ஜிஆர் நகர் குறுவள மையத்தில் கலைத் திருவிழாவில் வட்டார கல்வி அலுவலர்கள் ஆசிரியர் பயிற்றுநர் பள்ளியின் தலைமை ஆசிரியர் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் குறுவள மையத்திற்கு உட்பட்ட தலைமையாசிரியர்கள் ஆசிரியர்கள் நடுவர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..

# தமிழ்நாட்டின் புதிய டிஜிபியாக வெங்கட்ராமன் நியமனம்?

தமிழ்நாடு காவல்துறை டிஜிபியாக உள்ள சங்கர் ஜிவால் வரும் 31ம் தேதி ஓய்வு பெறும் நிலையில், புதிய டிஜிபியாக வெங்கட்ராமன் நியமனம் செய்யப்பட உள்ளார். அதற்கான அறிவிப்பு நாளை வெளியாகும் என தெரிகிறது. தமிழ்நாடு டிஜிபியாக உள்ள சங்கர் ஜிவால் வரும் 31ம் தேதி பணியில் இருந்து ஓய்வு பெற உள்ளார் தமிழகத்தை பூர்வீகமாக கொண்டவர்



வெங்கட்ராமன். 8.5.1968ம் ஆண்டு நாகப்பட்டினத்தில் பிறந்தார். பிஏ (எகனாமிக்ஸ்), எம்ஏ (பொது நிர்வாகம்) முடித்துள்ளார். பின்னர் யுபிஎஸ்சி தேர்வில் தமிழக கேடரில் 1994ம் ஆண்டு ஐபிஎஸ் அதிகாரியாக தேர்வானார். நாளையே புதிதாக தற்காலிக டிஜிபியாக வெங்கட்ராமன் நியமிக்கப்படுவார் என்று தகவல்கள் வெளியாகின்றன. மேலும் முதல்வர் வருகிற 30ம் தேதி வெளிநாடு செல்கிறார். இதனால் அதற்கு முன்னதாக அதாவது 29ம் தேதி புதிய டிஜிபி பதவி ஏற்பார் என்று தெரிகிறது.

# காவல்துறை பொது அறிவிப்பு

இந்த புகைப்படத்தில் உள்ளவர் கடந்த 25ஆம் தேதி அன்று பெங்களூர் ஓசூர் தேசிய நெடுஞ்சாலை



சர்வீஸ் சாலையில் உள்ள குட்டட்டி என்னும் இடத்தில் அத்திப்பள்ளி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் அடையாளம் தெரியாத நபர் உயிர் இறந்துள்ளார் இவரைப் பற்றி யாருக்கேனும் தெரிந்திருந்தால் கீழே உள்ள எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும் :

. Bangalore district.Anekal (Taluk) Attibele police station:08027821360...9480802436..



▶ வேலூர் மாவட்டம் குடியாத்தம் நகர காவல் ஆய்வாளராக ருக்மாங்கதன் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர்





▶ நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் நெல்லை கண்ணனை பாராட்டி ஒரு ஊரே நெல்லை கண்ணனுக்கு பரிவட்டம் கட்டி கொண்டாடினர் கோத்தகிரி அருகே உள்ள பெப்பேன் கிராமத்திற்கு சொந்த செலவில் பல்வேறு நல திட்ட உதவிகளை செய்துக் கொடுத்த கோத்தகிரி திமுக ஒன்றிய செயலாளர் நெல்லை கண்ணனை பாராட்டி ஊர் மக்கள் அவரை கோவிலுக்கு அழைத்து வந்து ஆடல் பாடலுடன் பஜனை பாடி பரிவட்டம் கட்டி அழைத்து வந்து, அன்னதானைத்தை துவக்கி வைக்க வைத்தனர்.இந்த நிகழ்ச்சியில் நெல்லை கண்ணனை ஊர் பொதுமக்கள் அனைவரும் பாராட்டினர்.



▶ உள்ளாட்சி முரசு காலை தினசரி நாளிதழ் ஆசிரியர் ஐயா ரிச்சர்ட் ஆனந்த் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள் வேலூர் மாவட்டம் பேர்ணாம்பட்டு செய்தியாளர் க அறிவழகன் அவர்கள் ஏழை எளிய பிள்ளைகளுக்கு கல்வி உபகரணங்களை மற்றும் இனிப்பு வழங்கி பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடினார்கள் உடன் ஐசக் டேனியல்



▶ கன்னியாகுமரி மாவட்டம் களியல் அருகே கட்டச்சல் பகுதியில் ரப்பர் ஷீட் உலர வைக்கும் ஆலையில் நேற்று பயங்கர தீ விபத்து ஏற்பட்டு பல லட்சம் மதிப்புள்ள ரப்பர் ஷீட் தீயில் எரிந்து நாசமானது. குலசேகரம் தீயணைப்பு துறையினர் போராடி தீயை அணைத்தனர்.






# ஆன்லைன் மோசடி தொடர்புடைய பயங்கர கேடிகள் மேற்குவங்கத்தைச் சேர்ந்த 3 பேர் பேர் கைது

சென்னை, ஆக.29-

ஆன்லைன் பங்கு வர்த்தக முதலீட்டு மோசடியில் ஈடுபட்ட 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட இருவேறு இணையவழி குற்ற வழக்குகளில் தொடர்புடைய மேற்கு வங்கத்தைச் சார்ந்த மூன்று நபர்களை இணையவழி குற்றப் பிரிவு போலீசார் கைது செய்துள்ளனர். ஆன்லைன் மோசடி கும்பலின் நடவடிக்கைகள் குறித்த விரிவான விசாரணையைத் தொடர்ந்து இந்த கைதுகள் செய்யப்பட்டன.

ஒரு ஆன்லைன் பங்கு வர்த்தக முதலீட்டு மோசடி பொதுவாக நியாயமானதாக தோன்றும் வாட்ஸ்அப் குழுக்களில் தனிநபர்களைச் சேர்ப்பதன் மூலம் தொடங்குகிறது. இந்த குழுக்களில் பெரும் இலாபங்களைக் காட்டும் போலி சான்றுகள் பல பகிரப்படும். நம்பிக்கையை வளர்க்க, மோசடி செய்பவர்கள் பெரும்பாலும் ஆரம்ப முதலீடுகளுக்கு சிறிய வருவாயை வழங்குகிறார்கள். மக்களின் நம்பிக்கையைப் பெற்று, அதிக தொகையை முதலீடு செய்தவுடன், மோசடி செய்பவர்கள் மறைந்துவிடுகிறார்கள். இதன் விளைவாக பெரும் நிதி இழப்பு ஏற்படுகிறது.

முதல் வழக்கில், புகார்தாரர் உண்மையான வர்த்தக தளம் என்று நம்பி பேஸ்புக்கில் இருந்து ஒரு இணைப்பைக் கிளிக் செய்து, பெரும் வருவாயை தரும் என்ற மோசடி செய்பவரின் வார்த்தைகளை நம்பி ரூபாய் 1.64 கோடி முதலீடு செய்தார். பி. என். எஸ் சட்டத்தின் 318 (4), 336(2)(3) பிரிவுகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப (திருத்த) சட்டத்தின் 66 டி மற்றும் 74 பிரிவுகளின் கீழ் இந்த வழக்கை மாநில இணையவழி குற்ற விசாரணை மையம் பதிவு செய்தது. இந்த வழக்கின் முக்கிய குற்றவாளி, சஹாசாதா ஹொசைன் 23 வயது, , 141, காமத் சங்க்ரபந்தா, கூச் பெஹார், மேற்கு வங்காளம் என்பவரை காவல் ஆய்வாளர் தலைமையிலான சிறப்புக் குழு கைது செய்தது. பங்களாதேஷ் எல்லையிலிருந்து 500 மீட்டர் தொலைவில் உள்ள ஒரு இடத்தில் அவர் கைது செய்யப்பட்டார். குற்றம் சாட்டப்பட்டவர் இந்த வழக்கில் சம்பத்தப்பட்ட வங்கிக் கணக்கின் உரிமையாளர் ஆவார். அந்த வங்கிகணக்கை ஆய்வு செய்தபோது, அவர் இந்தியா முழுவதும் தேசிய இணையவழி அறிக்கையிடல் தளத்தில் பதிவு



செய்யப்பட்ட 29 வழக்குகளில் தொடர்புடையவர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

இரண்டாவது வழக்கில், புகார்தாரர் வாட்ஸ்அப் வழியாக ஒரு ஆன்லைன் முதலீட்டு பயன்பாட்டில் அதிக வருவாயை உறுதியளித்ததை அடுத்து. 50லச்சம் முதலீடு செய்து லாபம் ஈட்டுவதாகக் கூறி ஏமாற்றப்பட்டார். இது தொடர்பாக, மாநில இணையவழி குற்ற விசாரணை மையத்தில் தகுந்த பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. விசாரணையின் அடிப்படையில், இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கில் முக்கிய குற்றவாளி, அமித் சஹா 24வயது, ஸ்ரீபூர், ஹரி மந்திர் சாலை, ஹப்ரா, வடக்கு 24 பர்கானாஸ், மேற்கு வங்கத்தில் கைது செய்யப்பட்டார். இவர் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட வங்கிக் கணக்கின் உரிமையாளர் ஆவார். அந்த வங்கிகணக்கை ஆய்வு செய்தபோது, இந்தியா முழுவதும் தேசிய இணையவழி அறிக்கையிடல் தளத்தில் பதிவு செய்யப்பட்ட 35 வழக்குகளில் தொடர்புடையவர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

மற்றொருவர் போலி வங்கிக் கணக்கு முகவர், கமலேஷ் தேப்நாத் 36வயது , மேற்கு வங்கத்தின் வடக்கு 24 பர்கானாஸ், பனிப்பூர், சைதன்யா சாலை, கமிஷனுக்காக போலி வங்கிக் கணக்குகளை வாங்கும் வங்கிக் கணக்கு முகவராக செயல்படுகிறார். கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் வழங்கிய தகவலின் அடிப்படையில் விசாரணைகள் நடந்து வருகின்றன.

காவல்துறை இயக்குநர், காவல் .சங்கர் ஜிவால், அவர்கள் மேற்கு வங்கத்தில் இருந்து இந்த குற்றவாளிகளை கைது செய்த சிறப்புக் குழுவைப் பாராட்டினார். இணையவழி குற்றப் பிரிவின் கூடுதல் காவல்துறை இயக்குநர் டாக்டர் சந்தீப் மிட்டல் அவர்கள், பின்வரும் ஆலோசனைகளை வழங்குவதன் எச்சரித்தார். மூலம் குடிமக்களை விழிப்புடன் இருக்குமாறு

பொதுமக்களுக்கு அறிவுரை:

வாட்ஸ்அப் அல்லது சமூக ஊடகங்களில் முதலீடு அல்லது வர்த்தக குழுக்களில் சேர கோரப்படாத அழைப்புகள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்.

இந்த குழுக்களில் பகிரப்பட்ட சான்றுகள் அல்லது செய்திகளை மட்டுமே நம்ப வேண்டாம், ஏனெனில் அவை பெரும்பாலும் தவறான நம்பிக்கை உணர்வை உருவாக்குவதற்காக புனையப்படுகின்றன.

உத்தியோகபூர்வ ஒழுங்குமுறை அமைப்புகள் மூலம் வர்த்தக தளம் அல்லது நிதி ஆலோசகரின் நற்சான்றிதழ்கள் மற்றும் நியாயத்தன்மையை சரிபார்க்காமல் பணத்தை முதலீடு செய்வதைத் தவிர்க்கவும்.

நபர்கள் அல்லது குழுக்களுடன் ஒருபோதும் பகிர்ந்து கொள்ள வேண்டாம். ஆரம்ப சிறிய வருமானங்களைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள், ஏனெனில் மோசடி செய்பவர்கள் பெரும்பாலும் பெரிய தொகைகளை முதலீடு செய்ய உங்களை கவர்ந்திழுக்க இவற்றைப் பயன்படுத்துகிறார்கள்.

பதிவுசெய்யப்பட்ட பங்கு தரகு நிறுவனங்கள் பற்றி தெரிந்து கொள்ள எப்போதும் செபி வலைத்தளத்தை சரிபார்க்கவும்.

https://www.sebi.gov.in/sebiweb/other/Other Action.do?doRecognised=yes

எந்தவொரு முதலீட்டு முடிவுகளையும் எடுப்பதற்கு முன் எப்போதும் முழுமையான ஆராய்ச்சியை மேற்கொண்டு நம்பகமான நிதி நிபுணர்களின் ஆலோசனையைப் பெறுங்கள்.

உங்கள் மொபைல் எண், சிம் கார்டு அல்லது வங்கிக் கணக்கைப் பயன்படுத்த மற்றவர்களை அனுமதிக்காதீர்கள், ஏனெனில் அவை சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு தவறாகப் பயன்படுத்தப்படலாம்.

எந்தவொரு காரணத்திற்காகவும் வேறு எந்த நபருக்கும் உங்கள் வங்கிக் கணக்கை கடன் வழங்குவது தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

புகார் அளிக்க:

நீங்கள் ஏதேனும் இணையவழி குற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள் என்று நீங்கள் சந்தேகித்தால் அல்லது ஏதேனும் சந்தேகத்திற்கிடமான செயல்பாட்டைக் கண்டறிந்தால், உடனடியாக நடவடிக்கை எடுப்பது முக்கியம். நிதி மோசடிகள் ஏற்பட்டால் இணையவழி கிரைம் உதவி எண் 1930ஐ டயல் செய்யவும் அல்லது www.cybercrime.gov.in வீஸீ இல் புகார் அளிக்கவும்

## மதுரையில் பயர்பீ டெக்னோ சர்வீசஸ் புதிய அலுவலகத்தை அமைச்சர் திறந்து வைத்தார்



ஃபயர்பீ டெக்னோ சர்வீசஸ் பிரைவேட். லிமிடெட், திருமதி பிரியாபாலன் அவர்களால் நிறுவப்பட்டு வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப நிறுவனம், மதுரையில் அதன் புதிய அலுவலகத்தை அதிகாரப்பூர்வமாகத் திறந்தது. ஃபயர்பீ டெக்னோ சர்வீசஸ் நிர்வாக இயக்குநர் பாலசுப்ரமணியம். மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் பழனிவேல் தியாக ராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.


மென்பொருள் மேம்பாட்டில் 15 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன், திருமதி பிரியாபாலன் மிஜி துறையில் வளர்ந்து வரும் பெயராக Firebee Techno Services ஐ நிறுவியுள்ளார். புதிய அலுவலகம், எண். 14, ராம் சஞ்சீவ் பிளாசா, எதிரில் அமைந்துள்ளது. லக்ஷ்மணா மருத்துவமனை, மதுரை 625004, நிறுவனத்தின் விரிவாக்க செயல்பாடுகள் மற்றும் குழுவிற்கு ஆதரவளிக்கும். Firebee Techno Services ஆனது பிளாக் செயின் மேம்பாடு, இணையம் மற்றும் மொபைல் பயன்பாடுகள், கிளவுட் தீர்வுகள் மற்றும் மிஜி ஆலோசனைகளை இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள 150+ நாடுகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது.




**▶ திருச்சியில் அன்பில் அறக்கட்டளையின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் கல்விப் பணிகளில் சிறந்து விளங்கும் ஆசிரியர்கள், மாணவர்கள், நிர்வாகிகள் ஆகியோருக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்து வருகின்றது. ஆகஸ்ட் மாதம் 28 ஆம் நாள் இந்த விழா 26 வது ஆண்டாக நடத்தப் பட்டது. இந்த விழாவில் பள்ளிக்கல்வி அமைச்சர் மாண்புமிகு அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் ஓசூர் மாநகராட்சி கல்விக் குழு தலைவர் திரு எச் ஸ்ரீதர் அவர்களுக்கு கல்வித்துறையில் ஓசூர் மாநகராட்சியில் பல்வேறு முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வருவதை ஊக்கப்படுத்தும் வகையில் அன்பில் 26 என்ற விருது வழங்கி பாராட்டியுள்ளார் .இந்த விழாவில் இணை இயக்குனர் திரு வை . குமார் மற்றும் ஆசிரியர் மனசத் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு சிகரம் சதீஷ்குமார் உள்ளிட்ட கல்வித்துறை அலுவலர்கள் தலைமை ஆசிரியர்கள் ஆசிரிய ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

## 2026 ம் ஆண்டு தேர்தலில் எல்லா கட்சிக்கும் தவெக பாதிப்பை ஏற்படுத்தும்: டிடிவி தினகரன்

தஞ்சையில் கட்சி நிர்வாகி இல்ல திருமண நிகழ்வில் கலந்து கொண்ட அம்மா மக்கள் முன்னேற்ற கழக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் 75ஆண்டு கட்சிக்கும், 50



ஆண்டுகால கட்சிக்கும் இணையாக வளர்ந்து வருகிறது. எனவே நாங்கள் ஒன்றிணைய வேண்டும் என்பது எங்களுக்கு இல்லை. எங்களது இயக்கத்தை பலப்படுத்த தான் கவனம் செலுத்துகிறோம். ஜெயலலிதாவின் தொண்டர்கள் அனைவரும் ஓரணியில் தேர்தலை சந்தித்தால் தான் வெற்றி பெறுவோம் என்பதை தான் தொடர்ந்து கூறி வருகிறேன். வருகிற தேர்தலில் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் உறுதியாக முத்திரை பதிக்கும். கடந்த 2006 ஆம் ஆண்டில் தேர்தலின் போது விஜயகாந்த் தொடங்கிய போது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தினார் அதுபோல வருகிற 2026 ஆம் ஆண்டு தேர்தலில் எல்லா கட்சிகளுக்கும் தவெக பாதிப்பை ஏற்படுத்தும். அதுதான் எதார்த்தமான உண்மை. அதற்காக நான் அந்த கூட்டணிக்கு செல்வதாக அர்த்தம் இல்லை. ஓபிஎஸ் சமாதானப்படுத்துவதற்கு டெல்லியில் உள்ளவர்கள் சமாதானப்படுத்தி கூட்டணிக்கு கொண்டு வர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## கொலை வழக்கில் குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை

செங்கல்பட்டு, ஆக.29-

செங்கல்பட்டு மாவட்ட முதன்மை நீதிமன்றம், தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த கோயில்ராஜ், வயது44, தகப்பனார் பெயர் ராஜா , என்பவர், ஜான் ராஜா சிங், வயது68, தகப்பனார் பெயர் தாசன், மாங்காடு, காஞ்சிபுரம், என்பவரைக் கொலை செய்த வழக்கில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு, 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இச்சம்பவம் அன்று இரவு 9.30 மணியளவில், பீர்க்கன்கரணை பகுதியில் உள்ள, ஒரு இரும்பு குடோனில் கணக்காளராக பணிபுரிந்து வந்த ஜான் ராஜா சிங், மது அருந்திவிட்டு வேலைக்கு வந்த, குற்றவாளி கோயில்ராஜை, தனது முதலாளியின் உத்தரவின் பேரில், வேலையிலிருந்து நீக்கியுள்ளார். இதன் காரணமாக ஏற்பட்ட தகராறில், பீர்க்கன்கரணை ஏரிக்கரையில் வைத்து கோயில்ராஜ், ஜான் ராஜா சிங்கை அவரது தலையையும் காதுகளையும் துண்டித்துக் கொலை செய்துவிட்டதாக, இறந்தவரின் சகஊழியரான சீனிவாசன், வயது 27, தகப்பனார் பெயர் யோகுப்பு, , அளித்த புகாரின் பேரில், பீர்க்கன்கரணை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

புலன் விசாரணையின் போது, குற்றவாளி கோயில்ராஜ், கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, தொடர்ந்து புலன்விசாரணையை சிறப்பான முறையில் முடித்து, குற்றப் பத்திரிக்கையை குற்றவாளி கோயில்ராஜிக்கு, எதிராக , நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, , 13 முக்கிய சாட்சிகளை விசாரணை செய்தும், 14 சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் மற்றும் 6 சான்று பொருட்களை பரிசீலனை செய்தும், உரிய சட்ட நடைமுறைகள் அனைத்தையும் பின்பற்றி, நீதிமன்றம் குற்றசாட்டபட்டவரை, குற்றவாளி என தீர்மானித்து 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும் ரூ.1,000/ அபராதமும், கட்ட தவறும்பட்சத்தில் கூடுதலாக 3 மாதங்கள் சிறை தண்டனையும் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

## ஆவடி காவல் மாவட்டத்தில் 30 குற்றவாளிகள் கைது!

ஆவடி, ஆக.29-

ரவுடிகளுக்கு எதிராக போலீசாரால் மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகள் ஆணையரகத்திற்குட்பட்ட ஆவடி மற்றும் ஆவடி காவல் செங்குன்றம் காவல் மாவட்டங்களில் குற்ற தடுப்பு நடவடிக்கையாக, கடந்த 18.08.2025 முதல் 24.08.2025 வரை நடைபெற்ற ரவுடிகளுக்கு எதிரான தொடர் தேடுதல் வேட்டையில் 65 சரித்திரபதிவேடு குற்றவாளிகள் மற்றும் தொடர் குற்றச்சம்பவங்களில் ஈடுபட்டவந்த 88 நபர்கள் உட்பட 153 பேர் மீது போலீசாரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 112 நபர்கள் நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டனர்.

மதுவிலக்கு அமலாக்க பிரிவின் சார்பில் 05 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு 36 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

ஆவடி காவல்மாவட்டத்தில் 30 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 10 சரித்திர பதிவேடு குற்றவாளிகளும், தொடர் குற்ற சம்பவங்களில் ஈடுபட்டு வந்த 14 நபர்களும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டனர். 06 குற்றவாளிகளை நடத்தையின் அடிப்படையில் எச்சரித்தும், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

செங்குன்றம் காவல் மாவட்டத்தில், 123 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 32 சரித்திர பதிவேடு குற்றவாளிகளும், தொடர் குற்றசம்பவங்களில் ஈடுபட்டு வந்த 56 குற்றவாளிகளும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டனர். 10 குற்றவாளிகளிடம் நன்னடத்தை பிணையம் பெற்றும், 25 குற்றவாளிகளை நடத்தையின் அடிப்படையில் எச்சரித்தும், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் தொடர்ந்து குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் ரவுடிகள் மீதான நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்படும் என ஆவடி காவல் ஆணையாளர் அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

குடியாத்தம் அருகே மரம் வெட்டிய போது

## மின்கம்பி அறுந்து 5 வயது பெண் சிறுமி மீது சாய்ந்து உயிரிழப்பு



வேலூர் மாவட்டம் குடியாத்தம் அடுத்த நத்தமேடு கிராமத்தில் கட்டிட தொழிலாளி குமார் மற்றும் ஜானகி இருவருக்கும் நான்கு பெண் குழந்தைகள் உள்ளன.

இவர் வீட்டின் அருகே அத்திராமுலூ என்பவருக்கு சொந்தமான விவசாய நிலத்தில் தென்னை மரம் வெட்டியபோது தென்னை மரம் மின் கம்பியின் மீது சாய்ந்ததில்

குமார் என்பவரின் வீட்டின் அருகே இருந்த மின்கம்பம் உடைந்து சாய்ந்ததில் வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்த குமாரின் மூன்றாவது 5 வயது நவ்யா பெண் குழந்தை மின் கம்பியில் சிக்கி உயிரிழந்தார் மேலும் அருகே இருந்த நாய் ஒன்றும் மின் கம்பியில் சிக்கி உயிரிழந்தது தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த குடியாத்தம் போலீசார் மற்றும் மின் துறை அதிகாரிகள் சிறுமியின் உடலை மீட்டு உடலை மீட்டு கூறு ஆய்வுக்காக குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து குடியாத்தம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

மேலும் அனுமதியின்றி மரம் வெட்டி மீன் கம்பியின் மீது சாய்ந்து வீட்டின் அருகே இருந்த மின்கம்பம் உடைந்து விளையாடிக் கொண்டிருந்த 5 வயது பின் சிறுமி மீது மின்சாரம் பாய்ந்து உயிர் இழந்த சம்பவம் கிராம மக்களிடையே மற்றும் உறவினர்கள் மத்தியிலும் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## ஜெயங்கொண்டம் நகரில் "அகில பாரத மூத்த, குடிமக்கள் மற்றும் பென்சனர்கள்" கூட்டமைப்பு சார்பாக சங்க "அலுவலக புதிய கட்டட திறப்பு" விழா

அரியலூர் மாவட்டம் உடையார் பாளையம் வட்டம் ஜெயங்கொண்டம் சோழபுரம்

வேலாயுத நகர் 4வது, கிராஸில் "அகில பாரத மூத்த, குடிமக்கள் மற்றும் பென்சனர்கள்" கூட்டமைப்பு (ஏபிஎம்கேபிகே) சார்பாக "சங்க அலுவலக, புதிய கட்டட திறப்பு" வட்டத் தலைவர் சி.சுந்தரரேசன், அவர்கள் தலைமையில் திறப்பு விழா, நடைபெற்றது.

செயலாளர் சீ.கலியமூர்த்தி, பொருளாளர் த.இராமமூர்த்தி, (முன்னாள்) பொருளாளர் பாஸ்கர. ஸ்டாலின், தலைமை நிலைய செயலாளர் சி.கணபதி, துணைத்தலைவர் சோ. இராமசாமி துணைச்செயலர் சோ. சாமிநாதன், நீ.நிஉ. திட்ட.துணைத் தலைவர் ஆர்.இராமையன், நீ.நி.உ.திட்ட துணைச் செயலர் சி.இராமசாமி, தணிக்கையாளர் ஆர்.வெங்கடாசலம், "திருவள்ளூர் ஞானமன்றம்" சீ.பன்னீர்செல்வம், மாவட்ட பிரதிநிதிகள் மா.பெருமாள் பி.முருகேசன், சோ.சாமிதுரை கே.ஆர். இராமலிங்கம், ஆகியோர்கள் முன்னிலையில் நீநிஉ திட்ட து.செயலாளர் பெ.பாலகிருஷ்ணன்,




வரவேற்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து கௌரவ தலைவர்

கோ.சிவசிதம்பரம், அவர்கள் கட்டடத்தை திறந்து வாழ்த்துரை வழங்கினார். விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், அரியலூர் மாவட்ட தலைவர் நல்லாசிரியர், லயன் ப.இராஜேந்திரன், வேளாண்மை இணை இயக்குனர் (ஓய்வு) சி.இளங்கோவன், கேப்டன் கந்தசாமி, ஆகியோர்கள் கலந்து கொண்டு "அவிநாசி' நிறுவனர் மாநிலத் தலைவர், சாதனையாளர் அமரர். சாமிநாதன், மகாத்மா காந்தியடிகள், டாக்டர். இராதாகிருஷ்ணன், அய்யன் திருவள்ளுவர், ஆகியோர்களின் திருவுருவப்படத்தை, திறந்துவைத்து" மலர் தூவி, மாலை அணிவித்து, சிறப்புரையாற்றினார்கள். மேலும் விழாநிகழ்ச்சியில் ஜெயங்கொண்டம் (எஸ்பிஐ) முதன்மை மேலாளர் எஸ்.இராஜராஜன், அண்ணாமலை பல்கலைக்கழகம் பேராசிரியர் (பநி) அ.சிவபெருமாள், ஆகியோர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். அதனைத்தொடர்ந்து நல்லாசிரியர், லயன் ப.இராஜேந்திரன், அவர்கள் விழாவில் கலந்து கொண்ட தாய்மார்கள், பெண் ஓய்வூதியதாரர்கள், அனைவருக்கும் "புடவைகள்" வழங்கி, விழாவினை சிறப்பித்தார். உடையார்பாளையம் வட்ட (எபிஎம்கேபிகே) பொறுப்பாளர் த.சண்முகசுந்தரம், விழா, நிகழ்ச்சிகள் அனைத்தையும் சிறப்பாக தொகுத்து வழங்கி, வழிநடத்தினார். (எபிஎம்கேபிகே) தணிக்கையாளர் பூ.இராமசாமி, நன்றி கூறி, கூட்டத்தினை நிறைவு செய்தார்.

## பழனி தண்டாயுதபாணி திருக்கோவிலுக்கு புதிய பேட்டரி கார்




பழனி, ஆக.29-

பழனி தண்டாயுதபாணி திருக்கோவில் வரும் பக்தர்கள் மற்றும் மூத்த குடிமக்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், மின் இழுவை ரயில் நிலையம், படிப்பாதை, கம்பி வட ஊர்தி நிலையம், சுற்றுலா பேருந்து நிலையம் பகுதிகளுக்கு செல்வதற்கு வசதியாக உபயதாரர்கள் அன்பளிப்புடன் 34 பேட்டரி கார்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் நேற்று (27 ம்தேதி) பூவாத்தாள் குரூப் கம்பெனி சார்பில் உபயதாரர் பொம்மண்ணசாமி 23 இருக்கைகள் கொண்ட ஒரு மின்கல ஊர்தியை திருக்கோவில் நிர்வாகத்திடம் உபயமாக வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் தண்டாயுதபாணி திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் சுப்பிரமணியம், திருக்கோவில் பொறியாளர்கள் மோகன்ராஜ், பார்த்திபன், கண்காணிப்பாளர்கள் சீனிவாசன், லட்சுமி நாராயணன் மற்றும் திருக்கோவில் ஊழியர்கள், உபயதாரர்கள் கலந்து கொண்டனர்.

## காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமை குறித்த வழிகாட்டி மையத்தில் காலி பணியிடங்கள்: ஆட்சியர்


காஞ்சிபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்படும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமை குறித்த வழிகாட்டி மையத்தில் காலியாக உள்ள தொகுப்பூதிய அடிப்படையிலான பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் பூர்த்தி செய்யப்பட உள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன், அவர்கள் தகவல்.

தமிழ்நாடு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தில் செயல்படும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமை




குறித்த வழிகாட்டி மையத்தில் காலியாக உள்ள தொகுப்பூதிய அடிப்படையிலான பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் பூர்த்தி செய்யப்பட உள்ளது. எனவே அக்காலிப்பணியிடங்களுக்கென குறிப்பிட்டுள்ள கல்வி மற்றும் இதர தகுதிகள் உள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. காலிப்பணியிடங்கள் குறித்த விவரம் மற்றும் விண்ணப்ப படிவத்தினை https://kancheepuram.nic.in/ என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தினை மாவட்ட சமூகநல அலுவலகம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக பழைய கட்டிடம் முதல் தளம், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரக வளாகம், காஞ்சிபுரம். என்ற முகவரியில் 04.09.2025 ஆம் தேதி மாலை 5.45க்குள் சமர்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.



**▶ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அருகே சுசீந்திரம் காவல் எல்லைக்குட்பட்ட வண்ணான்விளை பகுதியில் ஆன்றனி கிஷோர் என்பவர் ஆறு வருடங்களாக மர வியாபார கடை நடத்தி வருகிறார். நேற்று முன்தினம் இரவு (26ம் தேதி) இவரது கடையில் ரூ.20 லட்சம் மதிப்புள்ள தேக்கு மரங்கள் மற்றும் ஸ்விட்ச் போர்டுகள், மின் மோட்டார் சாதனங்களை சிலவற்றை மர்ம நபர்கள் திருடிச் சென்றுள்ளனர். இதுகுறித்து ஆன்றனி கிஷோர் கொடுத்த புகாரின் பேரில் சுசீந்திரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.**

# தமிழ்நாடு அரசின் சுற்றுலா விருதுகள் பெற தகுதியுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்

பெரம்பலூர், ஆக.29-

2025 ஆம் ஆண்டின் தமிழ்நாடு அரசின் சுற்றுலா விருதுகள் பெற தகுதியுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ், அவர்கள் தகவல்.

ஒவ்வொரு ஆண்டும் சுற்றுலாத்துறையால், சுற்றுலாத் தொழிலை ஊக்குவிப்பதற்காக சுற்றுலா தொழில்முனைவோருக்கு சுற்றுலா விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுகிறது. அதன்படி, இவ்வாண்டும் சுற்றுலாத் தொழிலில் ஈடுபட்டுள்ள சுற்றுலா தொழில் முனைவோர்களுக்கு 17 வகைப்பிரிவுகளின் கீழ் 48 விருதுகள் வழங்கப்பட உள்ளது.

தமிழ்நாட்டிற்கான சிறந்த சுற்றுலா ஏற்பாட்டாளர், சிறந்த உள்நாட்டு சுற்றுலா ஏற்பாட்டாளர், சிறந்த பயண பங்குதாரர், சிறந்த விமான பங்குதாரர் ; , சிறந்த தங்குமிடம், சிறந்த உணவகம் , தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சிறந்த உணவகம், தங்குமிடம் மற்றும் படகு இல்லம், சுற்றுலா ஊக்குவிப்பதற்கான சிறந்த மாவட்டம், சுத்தமான சுற்றுலாத் தலம் பல்வேறு சுற்றுலாப் பிரிவுகளின் சிறந்த ஏற்பாட்டாளர் சிறந்த சாகச மற்றும் தங்கும் முகாம்களுக்கான சுற்றுலா ஏற்பாட்டாளர் , சிறந்த "விமிசிணி" சுற்றுலா அமைப்பு, சமூக ஊடகங்களில் அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்துபவர் சிறந்த சுற்றுலா வழிகாட்டி , தமிழ்நாட்டிற்கான சிறந்த சுற்றுலா விளம்பரம் சுற்றுலாவினை பிரபலப்படுத்தும் வகையில் சிறப்பாக விளம்பரப்படுத்துதல் சுற்றுலா மற்றும் விருந்தோம்பலில் சிறந்த கல்வி நிறுவனம் ஆகிய தகுதிகள் உள்ளவர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பிக்கலாம்.

மேலும், இந்த வருடம் 202425ஆம் ஆண்டுக்கான சுற்றுலா விருதிற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் www.tntourismawards.com என்ற இணையதள முகவரியில் கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்து 15.09.2025 க்குள் தேவையான சான்றிதழ்களுடன் பதிவேற்றம் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. விண்ணப்பங்கள் தேர்வுக்குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு தேர்வு செய்யப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, பெரம்பலூர் மாவட்ட சுற்றுலாத் தொழில்முனைவோர் அனைவரும் சுற்றுலா விருதுக்கான விண்ணப்பங்களை விரைந்து இணையத்தளத்தில் பதிவு செய்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.


# அன்னை தெரசா தொண்டு அமைப்பின் சார்பில் அன்னை தெரசா பிறந்த நாள் விழா





அன்னை தெரசா பிறந்த நாளில் அவரை சிறப்பிக்கும் வகையில் சிறப்பாக நடைபெற்றது இந்நிகழ்வில் நிறுவனத்தின் ஆலோசகர் அருட்திரு விக்டர் அவர்கள் சிறிய ஜெபத்துடனும், அருட்திரு விஜயகுமார் அவர்கள் வாசகத்துடனும், ஆசிரியர் திரு சந்திரன் அவர்கள் தலைமை தாங்கினார், திரு ஜி குமார் ஆசிரியர், அவர்கள் அனைவரையும் வரவேற்றனர் அருட்திரு வின்சென்ட் டேவிட் மற்றும் அருட்துரையரசு பிறந்தநாள் கேக் வெட்டி விழாவை துவக்கி வைத்தனர் சிறப்பு விருந்தினராக கொத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் திரு கோதண்டராமன் மற்றும் கொத்தூர் நாட்டார்மை தாரர் சுரேஷ் ,புத்தூர் நாட்டாமை திரு நாகராஜ் வழக்கறிஞர் பாபு பொது சேவை அமைப்பினர் நிரஞ்சன், பிச்சை, தசரதன் ,விமலா கலந்து கொண்டனர் ஆம்பூர் கண்காடியார் தலைமை ஆசிரியர் திரு ஜான்சன் கொல்கத்தாவில் இருக்கும் அன்னை தெரசா தொண்டுகளை நேரில் பார்த்ததை அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.. நிகழ்வில் புத்தூர் மச்சம்பட்டு,பாலூர் பகுதியில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சால்வை அணிவித்து,பாராட்டு சான்றிதழ், கேடயம் வழங்கப்பட்டு .. தமிழக அரசால் பாராட்டப்பட்ட விருது பெற்ற தலைமை ஆசிரியர்கள் மலர்வேந்தன், சந்திரன், பிரேம்குமார், இவர்கள் செயலை பாராட்டி பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டது முதியோர்களுக்கு பெட்சீட், வேட்டி டவல் வழங்கப்பட்டது. தலைமை ஆசிரியர் கருணாரபிள்ளை அவர்கள் தொகுத்து வழங்கினர் , மற்றும் ஜெய்சங்கர், பிரவீன் வில்சன்,ராஜா,பழனி,தேவகுமார், மணிகண்டன், கோதண்டன், பூபாலன், அன்பரசன் அன்பு.. தலைமை ஆசிரியர்கள் வில்பிரட், பத்மநாபன் கலந்துகொண்டனர் நிகழ்வை அன்னை தெரசா தொண்டு அமைப்பின் செயலர் கயிலைநாதன் விழாவை ஒழுங்கு செய்து இருந்தார் நிகழ்வில் அனைவருக்கும் இனிப்பும் உணவு வழங்கப்பட்டது தலைமை ஆசிரியர் பிரேம்குமார் நன்றி கூற விழா இனிதே முடிந்தது.. நிகழ்வின் சிறப்பாக சென்னை சேர்ந்த ரமேஷ் பிருந்தா சபாபதி அறக்கட்டளை புத்தூர் கிராமத்தை சுற்றியுள்ள 15 கிராமங்களுக்கு ஆம்புலன்ஸ் வழங்குவது என்பது அறிவிக்கப்பட்டு பாராட்டுதலோடு விழா இனிதே முடிந்தது

# வாரணவாசி ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் சுந்தர் எம்எல்ஏ, செல்வம் எம்பி ஆகியோர் வழங்கினர்



வாலாஜாபாத், ஆக.29-

தமிழ்நாடு முழுவதும் அரசுத் துறையின் பல்வேறு சேவைகள் மக்களுக்கு எளிதில் கிடைக்கும் வகையில் உங்கள் வீடு தேடி வரும் அரசு என்ற கோஷத்துடன் உங்களுடன் ஸ்டாலின் எனும் புதிய திட்டம் முகாம் தமிழ்நாடு முழுவதும் தொடங்கப்பட்டு உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நகர்ப்புற பகுதிகளில் 69 முகாம்களும் ஊரகப் பகுதிகளில் 155 முகாம்கள் என 224 முகாம்கள் தொடங்கப்பட்டு மாவட்டம் முழுவதும் தொடர்ந்து நடைபெற்று

வருகின்றன.

அந்தவகையில்காஞ்சிபுரம்மாவட்டம் வாலாஜாபாத் ஒன்றியத்திற்குட்பட்ட வாரணவாசி, குண்ணவாக்கம் வேண்பாக்கம்,தொள்ளாழி உள்ளிட்ட ஊராட்சியைசேர்ந்தமக்கள்பயன்பெறும் வகையில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் வாரணவாசி தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் சுந்தர் எம்எல்ஏ, செல்வம் எம்.பி ஆகியோர் கலந்துகொண்டு முகாமினை தொடங்கி வைத்து பார்வையிட்டனர். முகாமில் பொதுமக்களிடமிருந்து 15 துறைகளுக்கான பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய விண்ணப்ப மனுக்களை பெற்றனர். பெறப்பட்ட மனுக்களுக்கு முகாமில் வீட்டு வரி, மின் இணைப்பு சொத்து வரி, புதிய குடும்ப அட்டை உள்ளிட்ட மனுக்களுக்கு உடனடியாக முகாமிலேயே தீர்வு காணப்பட்டு அதற்கான ஆணையினை செல்வம் எம் பி, சுந்தர் எம்எல்ஏ ஆகியோர் வழங்கினர்.

மேலும் பொதுமக்களிடமிருந்து பெற்ற மனுக்கள் மீது துறை சார்ந்த அதிகாரிகள் விரைவாக தீர்வு காணும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

முகாமில் ஒன்றிய குழு தலைவர் தேவேந்திரன்,

ஒன்றிய குழு துணை தலைவர் சேகர், ஒன்றிய கவுன்சிலர் சஞ் சய்காந்தி ,ஊராட்சி மன்ற தலைவர் பிரேமாமோகனசுந்தரம், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ஏகவல்லிஅண்ணப்பன், திமுக ஒன்றிய துணை செயலாளர் குப்புசாமி, முன்னாள் மாவட்ட வருவாய் அலுவலர் மோகனசுந்தரம் உள்ளிட்ட அனைத்து துறைகளை சார்ந்த அரசு அலுவலர்கள் மற்றும் திமுக மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கெலமங்கலம் பேரூராட்சி 3வது வார்டில் பொதுமக்கள் சார்பில் விநாயகருக்கு சிறப்பு பூஜை பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் மும்தாஜ் சையத் அசேன் பங்கேற்பு





கெலமங்கலம் பேரூராட்சி 3வது வார்டில் பொதுமக்கள் சார்பில் விநாயகருக்கு சிறப்பு பூஜைபேரூராட்சி மன்றதுணைத் தலைவர் மும்தாஜ் சையத் அசேன் பங்கேற்பு

இன்று நாடு எங்கிலும் விநாயகர் சதுர்த்தி வழக்கமாக உற்சாகத்துடன் விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பல்வேறு அமைப்பினர்களும் விதவிதமான வித்தியாசமான பிரம்மாண்டமான விநாயகர் சிலைகள் அமைத்து வழிபடுவார்கள் அந்த வகையில்

விநாயகர் சதுர்த்தி திருவிழா பொதுமக்கள் சார்பாக கெலமங்கலம் 3வது வார்டில் மிக பிரம்மாண்டமான சக்தி வாய்ந்த விநாயகரை வைத்துவிநாயகருக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு மலர்களால் அலங்கரிக்கப்பட்டு ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை,வாழைப்பழம் உள்ளிட்ட பழங்களை வைத்து தேங்காய் உடைத்து கற்பூர தீபாராதனைக் காட்டி சிறப்பு பூஜைகள் செய்துதீர்த்த பிரசாதம் வழங்கப்பட்டது. மற்றும்

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கெலமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் மும்தாஜ் கே.எஸ். சையத் அசேன் அதிமுக கழக சிறுபான்மையினர்கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர், மற்றும் கெலமங்கலம் பேரூராட்சி 3வது வார்டில் உள்ள பொதுமக்கள் சார்பாக அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. மற்றும் இந்த நிகழ்ச்சியில் பலர் கலந்துக்கொண்டனர்,

இதேப்போல் கெலமங்கலம் அண்ணா நகரில் விநாயகர் சிலைக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் அதிமுக கழக சிறுபான்மையினர் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் கே.எஸ்.சையத் அசேன் அவர்கள் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார்.

# மழையின்றி வேர்க்கடலை செடிகள் காய்ந்து வரும் அவலம்



கிருஷ்ணகிரி, ஆக.29-

ஒசூர் சூளகிரி ராயக்கோட்டை உலகம் ஏனுசோனை உள்ளட்டி எட்டிப்பள்ளி சீபம் அஞ்செட்டி தேன்கனிக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் சாகுபடி செய்துள்ள நிலக்கடலையை காட்டு பன்றி மற்றும் போதிய மழை இல்லாமல் செடிகள் காய்ந்து கருகி வருவதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆண்டுத் தோறும் பருவ மழையினை நம்பி விவசாயிகள் தரிசு நிலம் மற்றும் வானம் பார்த்த பூமிகளில் குறைந்த முதலீட்டில் அதிக வருவாய் தரக்கூடிய எண்ணெய் வித்து பயிர்களின் ஒன்றான நிலக்கடலை பயிர்களை மாவட்டம் முழுவதும் சாகுபடி செய்து உள்ளனர்.

இதில் ஒசூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பாகலூர், பேரிகை , சூளகிரி,

அஞ்செட்டி ,தளி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் நிலக்கடலகடலை சாகுபடி செய்துள்ளனர். சாகுபடி செய்துள்ள நிலக்கடலை காய்பிடிக்கும் நேரத்தில் போதிய மழை இல்லாதால் நிலக்கடலை செடிகள் கருகி வருகிறது.

இதனால் விவசாயிகள் மத்தியில் பெரும் சோகம் ஏற்படுத்தி உள்ளது.

மேலும் காட்டுப் பன்றிகளும், குரங்குகளும் அருகில் உள்ள வனப்பகுதியிலிருந்து வந்து கூட்டம் கூட்டமா விளை| நிலங்களுக்குள் புகுந்து நிலக்கடை செடிகளை பிடிங்கி நாசம் செய்து விட்டு செல்வதால் விவசயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து பாதிக்கப்பட்டுள்ளவர்கள்

கூறுகையில் பருவமழையை நம்பி நிலக்கடலை சாகுபடி செய்தோம் ஆனால் அறுவைடை இன்னும் ஒரு மாதம் இருக்கும் நேரத்தில் போதிய மழை இல்லாத காரணத்தினால் நிலக் கடலை செடிகள் வெயிலின் தாக்கத்தின் காரணமாக கருகி வருகின்றன.

மேலும் இரவு நேரங்களில் காட்டுப்பன்றிகளும், பகலில் குரங்கு தொல்லையும் அதிகரித்துள்ளதால் நிலக்கடலை சகுபடியும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆகையால் நிலக்கடலையை காட்டுப் பன்றிகளிடமும், குரங்குகளை கட்டுப்படுத்த வனத்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# அனைத்திந்திய இந்து திருக்கோயில்கள் பாதுகாப்பு சங்கத்தின் சார்பாக பொதுமக்களுக்கு அன்பளிப்பாக விநாயகர் சிலைகள் வழங்கும் விழா:



அனைத்திந்திய இந்து திருக்கோயில்கள் பாதுகாப்பு சங்கத்தின் சார்பாக பொதுமக்களுக்கு அன்பளிப்பாக விநாயகர் சிலைகள் வழங்கும் விழா:

அனைத்திந்திய இந்து திருக்கோயில்கள் பாதுகாப்பு சங்கம் விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு இந்தியாவிலேயே முதல் முறையாக பொதுமக்களுக்கு அன்பளிப்பாக களிமண்ணால் ஆன விநாயகர் சிலைகள் வழங்கும் நிகழ்வு தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் நடைபெற்று வருகிறது.அதே போல் இந்த ஆண்டும் கரூர் மாவட்டம் குளித்தலை ஆண்டார் வீதியில் உள்ள அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலில் கோயிலுக்கு வரக்கூடிய பக்தர்களுக்கு அன்பளிப்பாக (இலவசமாக ) களிமண்ணால் ஆன விநாயகர் சிலைகள் வழங்கப்பட்டது.விநாயகர் சிலைகளை பெற்று கொண்ட பக்தர்கள் சங்கத்தின் பொறுப்பாளர்களுக்கு நன்றி தெரிவித்து சென்றனர்.

மேலும் குடிசை பகுதியில் வாழக்கூடிய பொதுமக்களின் வீட்டிற்கே சங்கத்தின் பொறுப்பாளர்கள் சென்று களிமண்ணால் செய்யப்பட்ட விநாயகர் சிலைகளை வழங்கினர்.

இந்த விழா ஏற்பாடுகளை சங்கத்துடைய தேசிய தலைவர் அருள்வேலன் ஜி அவர்களின் ஆலோசனை படி சங்கத்தின் மாவட்ட பொறுப்பாளர்கள் ராமகிருஷ்ணன், கருணாநீதி, மதியழகன், வெங்கடேசன் , மஹா விஷ்ணு , ரவி , செந்தில் , சரவணன், சக்தி ஆகியோர் மிகச் சிறப்பாக செய்திருந்தனர். விழாவின் இறுதியில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# ஓசூர் ஜூஜூவடியில் விஜயகாந்த் பிறந்த நாளை முன்னிட்டு நல திட்ட உதவிகள் வழங்கி அன்னதான நிகழ்ச்சி





தமிழக முழுவதும் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கட்சியின் தொண்டர்கள் ஆங்காங்கே கேக் வெட்டி இனிப்புகள் வழங்கி கோவில்களில் சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்டனர் அந்த வகையில் அதன் ஒரு பகுதியாக

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் மாநகராட்சிக்கு உட்பட்ட அசோக்லேலண்ட் எதிரில் ஜூஜூவடியில் பகுதியில் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிறுவன தலைவர் விஜயகாந்த் அவர்களின் 73 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட தொண்டர் அணி செயலாளர்,டி,முனியப்பன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு தேமுதிக கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட மாநகர மாவட்ட கழக செயலாளர் ராமசாமி ரெட்டி பாஜக, சிவனேசன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டுவிஜயகாந்த்அவர்களின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி ஏழை எளிய மக்களுக்கு சேலைகளும் வேஷ்டிகளும் வழங்கிஇதில் சுமர் 1000 பேருக்கு அன்னதான நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார்..

இந்த நிகழ்சி ஏற்பாட்டினை.ஜூஜூவாடி கிளை உறுப்பினர்கள். குமார் சேகர் சந்திரசேகர் சத்யராஜ் தனசேகர் கோவிந்தராஜ் ராஜா, அன்பு , சந்திரசேகர் மேஸ்திரி, வெல்டர் சேகர், சரவணன், எஸ் ஆர் எஸ், முருகன் மணிராஜா இதயம் கார்த்திக் ஆகாஷ். ஆகியோர் இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்திருந்தார்கள்

மேலும் இந்த நிகழ்ச்சியில் அவைத்தலைவர் சரவணன் பொருளாளர் அறிவழகன் செயற்குழு உறுப்பினர் வாசுதேவன் துணைச்செயலாளர் எம்.எம். வெங்கடேஷ் ராஜசேகர் வடிவேல் ஈஸ்வரன் பொன்னரசு குமார்,ராஜா,நாகராஜ்,மாரிதாஸ், ஒன்றிய செயலாளர்கள் கண்டராயன்,அப்பையா, சிவகுமார் வரதராஜ், சுரேஷ், கிருஷ்ணன், தசரதன், மாருதி, அக்பர், பாலசுப்ரமணியன், முருகானந்தம் ,மற்றும் தேமுதிகவின் நிர்வாகிகள் தொண்டர்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

# மௌலிவாக்கத்தில் புதிய காவல் நிலையம் திறப்பு விழா

## குறு, சிறு (ம) நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் (ம) ஆவடி மாநகர காவல் ஆணையாளர் கி.சங்கர் பங்கேற்பு

**குன்றத்தூர், ஆக.29-** காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியத்திற் குட்பட்ட மௌலிவாக்கம் காவல் நிலையம் மாங்காடு காவல் நிலையத்திலிருந்து பிரிக்கப்பட்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.

மாங்காடு காவல் நிலையம் 13 தாய் கிராமங்களையும், 5 குக்கிராமங்களையும் உள்ளடக்கியதாக சுமார் 48 சதுர கி.மீ பரப்பளவில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலைய எல்லைக்குள் அதிக கல்வி நிலையங்கள், வழிபாட்டு தலங்கள், குடியிருப்பு பகுதிகள் அமைந்துள்ளது.

இதனால் இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை கருத்தில் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் சட்டப்பேரவையில் மௌலிவாக்கம் என்ற புதிய காவல் நிலையம் உருவாக்கப்படும் என்ற அறிவிப்பை வெளி யிட்டார்கள். அதன்படி காவல் நிலையம் துவங்குவ தற்காக செலவினமாக ரூ.2,74,45,750 (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்து நான்கு லட்சத்து நாற்பத்து ஐந்தாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்) அரசால் ஒதுக்கப் பட்டுள்ளது.

மௌலிவாக்கம் காவல் நிலையமானது 06 தாய் கிராமங்களையும், 2 குக்கிராமங்களையும் உள்ளடக்கியதாக 20 சதுர கீ.மீ பரப்பளவு கொண்டதாகவும் அமைந்துள்ளது.

இக்காவல் நிலையம், 1 ஆய்வாளர், 2 உதவி ஆய்வாளர்கள், 2 தலைமைக் காவலர்கள், 9 முதல் நிலை காவலர்கள், மற்றும் 17 இரண்டாம் நிலை காவலர்கள் என மொத்தம் 31 காவலர் களுடன் இயங்க உள்ளது.

மேலும் தற்காலிகமாக நகராட்சிக்கு சொந்தமான அங்கன்வாடி கட்டிடத்தில் தொடங்கப்பட்டுள்ள காவல் நிலையத்திற்கு விரைவில் தனி கட்டிடம் கட்டப்படும். மௌலி வாக்கம் காவல் நிலைய வரம்பிற்குள் மக்கள் தொகையானது 1 இலட்சத்தை விட அதிகமாகவும், காவல் நிலைய எல்லைக்குள் 12 கல்வி நிலையங்கள், 19 வழிபாட்டு தலங்கள், 8 பெரிய தொழிற்சாலைகள் ஆகி யவை அமைந்துள்ளது.

இந்நிகழ்வில் ஆவடி மாநகர காவல் ஆணையாளர் ஆகூஷன் கிங் கி.சங்கர், கூடுதல் ஆணையாளர் பவானீ ஸ்வரி ஆவடி காவல் மாவட்ட காவல் துணை ஆணையாளர் சமூக சேவகர், பெரோஸ் கான் அப்துல்லா, மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், காவல் ஆய்வாளர்கள், காவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.







### ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் முன்பு

# புதிய தோரண வாயில் கட்டும் பணி பூஜை தொடக்கம்

**ஸ்ரீவில்லிபுத்தூர், ஆக.29-** ஸ்ரீவில்லிபுத்தூர் 108 வைணவத் தலங்களில் முக்கியத்துவம் வாய்ந்தது. பெரியாழ்வார் ஆண்டாள் ஆகிய இரண்டு ஆழ்வார்கள் அவதரித்த புண்ணிய பூமி ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகும். இங்கு கோவில் கொண்டுள்ள ஸ்ரீஆண்டாள் ரங்க மன்னார் மற்றும் வடபத்திர சயன பெருமாள் சுவாமிகளை தரிசிக்க தினமும் வெளியூர், வெளி மாநிலங்களைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் வந்து செல்கின்றனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இத்திருகோ விலுக்கு பிரதான வழியில் தோரண நுழைவாயில் இல்லாத நிலை இருந்து வந்தது. தற்பொழுது ஆண்டாள் கோவிலுக்கு பிரதான தோரண வாயில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு திருக் கோவில் அறங்காவலர் தா யில்பட்டி வெ.மனோகரன் வெங்கடசாமி சுமார் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் செய்வதற்கு முன் வந்துள்ளார். இதற்கான பூமி பூஜை நடைபெற்றது. கோவில் தலைமை ஆண்டாள் சேவகர், பட்டாச்சாரியார் ஸ்ரீ வாரி வி.முத்துப்பட்டர் தலைமையில் பிரபு என்ற வெங்கட்ராம பட்டர், கோவில் மணியம் கோபி, ஸ்தாணிகம் ரமேஷ், ஆகியோர் பூஜைகளை நடத்தி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் உபயதாரரும், அறங்காவலருமான தா யில்பட்டி வெ.மனோகரன் வெங்கடசாமி, சாத்தூர் இருக்கன்குடி மாரியம்மன் திருக்கோவில் உதவி ஆணையர் இளங்கோவன், கோவில் செயல் அலுவலர் சர்க்கரை அம்மாள், சிவகாசி காசி விஸ்வநாதர் கோவில் செயல் அலுவலர் கலா ராணி, பென்னிங்டன் கமிட்டி பள்ளி பொருளாளர் அம்சவேணி மற்றும் அர்ச்சகர்கள் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர். ஆண்டாள் கோவில் பிரதான நுழைவாயிலில் அலங்கார தோரணவாயில் அமைக்கப்படுவதை அறிந்து பக்தர்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.





சென்னையில் அனைத்து அமைப்புசாரா தொ.மு.ச. மாவட்ட, மாநில நிர்வாகிகள், வாரிய கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் திருவண்ணாமலை மாவட்ட கண்காணிப்பு குழு உறுப்பினர் A.A.ஆறுமுகம் உரையாற்றினார். பொதுச்செயலாளர் இரா.பொன்ராம், பொருளாளர் ராஜாகுப்புசாமி, துணைத்தலைவர் ஜே.பழனி உள்ளிட்ட மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வேப்பந்தட்டை ஒன்றியத்துக்குட்பட்ட

# நெற்குணம் கிராம ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம்

**பெரம்பலூர், ஆக.29-** பெரம்பலூர் மாவட்டத்தில் 26.8.2025 செவ்வாய்க்கிழமையன்று வேப்பந்தட்டை ஊராட்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் நடைபெற்றது. இதில் நெற்குணம், கால்னி, நூத்தப்பூர், பாளையம் ஆகியவை கலந்து கொண்டனர்.

முகாமில் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகரன் ஆய்வு செய்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். முகாமில் தாசில்தார் துரைராஜ், தனி வட்டாட்சியர் சமூக நலப் பாதுகாப்பு திட்டக் தாசில்தார் சுகுணா தலைமை வகித்தனர்.

மேலும் வட்டார வளர்ச்சி அலுவலர் பூங்கொடி மற்றும் அலுவலர் செல்வகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இம்முகாமில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மொத்த மனுக்கள் 993 பெறப்பட்டது. இதுவரை உரிமை தொகை பெறாத பெண்கள் கலந்துகொண்டு மனு கொடுத்தனர்.



சுகாதாரத்துறை, நகராட்சி நிர்வாக கூட்டுறவு வருவாய்த்துறை, எரிசக்தி துறை, மின்சாரத்துறை, மாற்றுத்திறனாளிகளின் நலத்துறை, வேளாண்மை உழவர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, வீடு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, சிறு, குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தகவல் தொழில்நுட்பத் துறை, கால்நடை பராமரிப்பு துறை, மீன்வளத்துறை மற்றும் பால்வளத்துறை, அனைத்துக்கும் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் அனைத்துக்கும் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டும் என முதல்வர் உத்தரவிட்டு உள்ளார் அதன் அடிப்படையில் அதிகாரிகள் பணிபுரிந்து வருகின்றனர்.

மேலும் வருவாய் ஆய்வாளர் இராமலிங்கம், கிராம ஊராட்சி செயலாளர் மாணிக்கவாசகம், கிராம நிர்வாக அலுவலர் இராஜேந்திரன், சூர்யா மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர். முகாம் மிகச்சிறப்பாக முடிவடைந்தது.

# காஞ்சிபுரத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்



**காஞ்சிபுரம், ஆக.28-** காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஒன்றியம் மேல் கதிர்பூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது.

இந்த மாபெரும் குறைதீர்க்கும் முகாமில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு ஜாதி சான்றிதழ் புதிய ரேஷன் கார்டு விவசாயிகளுக்கு தேவையான விதைகள், இலவச வீட்டு மனை பட்டா போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய குழு பெருந்தலைவர் மலர்கொடி குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் லோகநாதன், வட்டாட்சியர் ரஃபிக் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், ஊராட்சி மன்ற தலைவர் பேபி சேட்டு, ஊராட்சி மன்ற துணைத்தலைவர் பிரியா குமரேசன், கோபி உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி வளாகம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மாவட்ட விளையாட்டு அரங்கில் 2025-2026ம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டியை துவக்கி வைத்தார். உடன் மேயர் ந.தினேஷ்குமார், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் மோகனசுந்தரம், மாவட்ட விளையாட்டு அலுவலர் ரகுகுமார் ஆகியோர் உள்ளனர்.

# அந்தியூர் வட்டம் தோனிமடுவு பகுதியில் தடுப்பணை கட்டுவது தொடர்பாக அமைச்சர் ஆய்வு

**ஈரோடு, ஆக.29-** ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம் தோனிமடுவு பகுதியில் (27.08.2025) அன்று வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி தடுப்பணை கட்டுவது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்.

தாமரைக்கரை, தேவர்மலை மற்றும் மலைப்பகுதி மற்றும் சுற்றிலுள்ள பகுதிகளில் பெய்யும் மழை நீரானது கீழே வந்து பாலாறுவுடன் கலக்கிறது. மேலும் இந்த தண்ணீர் வீணாக கடலில் போய் சேர்வதை தவிர்க்கவும் கோடை காலங்களில் வனவிலங்குகளுக்கு தண்ணீர் கிடைக்காமல் வனப்பகுதியை விட்டு வெளியே குடியிருப்பு பகுதிக்கு செல்வதை தடுப்பதற்காகவும் ஒரு தடுப்பணை வேண்டும்மெனபொது மக்கள் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்களிடம் கோரிக்கை வைத்தனர். இக்கோரிக்கையை ஏற்று தடுப்பணை கட்டுவதற்கு சாதகமாக உள்ள இடத்தினை அமைச்சர் ஆய்வு செய்தார்.

அந்தியூர், மேட்டூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அந்தியூர், பவானி, மேட்டூர் தொகுதி விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இத்திட்டமானது, தோனிமடுவு பள்ளத் திலிருந்து வரும் வெள்ள நீரை ஒரு தடுப்பணை அமைத்து திருப்பி சேலம் மாவட்டம் மேட்டூர் தாலுகாவின் கொளத்தூர் பகுதி மற்றும் ஈரோடு மாவட்டத்தில் உள்ள அந்தியூர், பவானி தாலுகாக்களிலுள்ள வறண்ட நீர்நிலைகளுக்கு திருப்பி விடுவதாகும்.

அகழிகள் வழியாக நீரைகொண்டு செல்ல அகழிகள் முழுவதும் மட்ட அளவுகள் எடுத்து,

அதனடிப்படையில் தடுப்பணை அமையவிருக்கும் இடத் திலிருந்து ஏரிகள்

மற்றும் குளங்களுக்கு புவியீர்ப்பு விசை அல்லது நீர் உந்து மூலம் நீர் கொண்டு செல்வது குறித்து விரிவான ஆய்வு செய்யப்படும்.

ஆய்வின்போது, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திர குமார் (ஈரோடு கிழக்கு), ஏ.ஜி.வெங்கடாசலம் (அந்தியூர்), ஈரோடு வன அலுவலர் குமிலி வெங்கட அப்பால நாயுடு, செயற்பொறியாளர் நீர்வளத்துறை ரவி, உதவி செயற்பொறியாளர் லோகபிரியா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





# நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உயர்வுக்கு படி வழிகாட்டி நிகழ்ச்சி

**திருவண்ணாமலை, ஆக.29-** தமிழ்நாடு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி (28.08.2025) அன்று திருவண்ணாமலை கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரியில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உயர்விற்கு படி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ் முன்னிலை வகித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சரின் கனவு திட்டமான நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உயர்வுக்கு படி என்ற நிகழ்ச்சியின் வாயிலாக 12 ஆம் வகுப்பு தோல்வியுற்ற அல்லது 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று பல்வேறு காரணங்களால் உயர்கல்விக்கு விண்ணப்பிக்க தவறிய மாணவர்களுக்கு வழிகாட்டும் வகையில் உயர்வுக்குபடி சிறப்பு முகாம் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறுகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் இந்த முகாம்கள் மூன்று கோட்டங்களில் இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளது.

அதன்படி திருவண்ணாமலை, கீழ்பென்னாத்தூர், துரிஞ்சாபுரம், செங்கம், தண்டராம்பட்டு மற்றும் புதுப்பாளையம் ஆகிய ஒன்றியங்களை சேர்ந்த மாணவர்களுக்கு உயர்வுக்குபடி நிகழ்ச்சி திருவண்ணாமலை கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றியாற்றிதாவது:

12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று பல்வேறு காரணங்களால் உயர்கல்வி பயிலாமல் இருப்பவர்களை கண்டறிந்து ஆலோசனைகளை வழங்கி உயர்கல்வி பயில தகுந்த வழிகாட்டுதலை வழங்குவதற்காக உயர்வுக்குபடி நிகழ்ச்சிகள் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது. இதன் மூலம் மாணவ, மாணவிகளின் உயர்கல்வி பயில்வதை உயர்த்த முடியும். இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களை காட்டிலும் தமிழ்நாட்டில் தான் உயர்கல்வி படிக்கும் மாணவ, மாணவிகளின் விகிதம் அதிகமாகும். அதற்கு மிக முக்கிய காரணம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதி தான் என்றால் அது மிகையாகாது. அவருடைய ஆட்சிகாலத்தில் தான் மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகளும், அரசு கலைக்கல்லூரிகளும் தொடங்கப்பட்டது.

உலகின் பல்வேறு பகுதிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் தான் தொழில் நிறுவனங்களில் பணிபுரிகின்றனர். அதற்கு மிக முக்கிய காரணம் கல்வித்துறையில் அடிப்படை கட்டமைப்பு சிறந்து விளங்குவதாகும். கல்வியின் வாயிலாக தான் நாம் அனைத்தையும் பெற முடியும். மேலும் மாணவ, மாணவிகள் இந்த உயர்கல்வி வழிகாட்டு நிகழ்ச்சியை பயன்படுத்திக் கொண்டு வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் தெரி வித்தார்.

மேலும் உயர்கல்வி பயிலாத மாணவர்களை கண்டறிந்து உயர்கல்வி பயில்வதற்கான ஆணைகளை தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத்தலைவரும், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவரும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. இராம்பிரதீபன், உதவி ஆட்சியர் (பயிற்சி) அம்ருதா எஸ்.குமார், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் ராஜ்குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.





ULLATCHI MURASU Tamil Daily, Owned, Published by B. RICHERD ANAND, No.376, 13th Lane, Annai Sathya Nagar, Anna Nagar East, Chennai - 600 102. and Printed by ALI MOHAMED SAYEED at J.M. Prosess, 29, V.N. Doss Road, Borderthottam, Mount Road, Chennai - 600 002. Editor: B. RICHERD ANAND, Mobile: 97899 98851.